Saturday
# மெயில்
01 - 49
04-09-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin



## பிறப்புச் சான்றிதழை நெற்றியில் ஒட்டிக்கொண்டு எப்போதும் திரிய முடியாது

தனது மதம் பற்றி கிளப்பப்படும் சந்தேகங்களால் எரிச்சலடையும் பராக் ஒபாமா

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registe... G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மதம் குறித்து செய்யப்பட்டு வருகின்ற தலறான பிரசாரங்களினால் ஆத்திரமடைந்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது நெற்றியில் எப்போதுமே பிறப்புச் சாட்சிப்பத்திரத்தை ஒட்டிக் கொண்டு திரியமுடியாது என்று சூடாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தான் ஒரு முஸ்லிம் என்றும் அமெரிக்காவில் பிறந்தவரல்ல என்றும் கிளப்பப்படும் சந்தேகங்களை திட்டவட்டமாக நிராகரித்திருக்கும் ஒபாமா இத்தகைய அபத்தங்களுக்கு அப்பால் சிந்திப்பதில் அமெரிக்க மக்களுக்கு இருக்கின்ற ஆற்றலில் தனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

என்.பி.சி. நைற்லி நியூஸ் ரெலிவிசன் நிகழ்ச்சியில் இவ்வாரம் ஒருதடவை கலந்து கொண்ட ஜனாதிபதி ஒபாமாவிடம் 'உங்களை ஒரு முஸ்லிம் என்று 20 சதவீதமான அமெரிக்கர்கள் கூறுகிறார்களே' என்று கேட்டபோது 'செனட்சபைக்கு தெரிவாவதற்கு போட்டியிட்டவேளையில் இத்தகைய பிரச்சினையை நான் எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனக்கு ஒரு வேடிக்கையான பெயர் இருப்பதன் காரணமாக அமெரிக்க செனட்டராக தேர்தலில் வெற்றி பெற என்னால் முடியாது என்று கூறியவர்கள் இருக்கிறார்கள். இருந்தும் கூட இலினோயிஸ் மாநிலத்தில் நான் செனட்சபை ஆசனத்திற்கு தெரிவாகக் கூடியதாக இருந்தது' என்று பதிலளித்திருக்கிறார்.

தனது மதம் குறித்துக் கிளப்பப்படும் வதந்திகளை ஒபாமா கண்டனம் செய்திருக்கின்ற போதிலும் கூட, நியூயோர்க்கில் 2001 செப்டெம்பர் 11 இல் இஸ்லாமியத் தீவிரவாதிகளினால் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களினால் முற்றாக நிர்மூலமான உலகவர்த்தகமையத்தின் இரட்டைக் கோபுரங்கள் அமைந்திருந்த இடத்துக்கு அண்மையாக பள்ளிவாசலொன்றை நிர்மாணிப்பதற்கு முஸ்லிம்களுக்கு உள்ள உரிமைக்கான தனது ஆதரவை மீண்டும் அவர் வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறார்.



'வெள்ளை மாளிகையில் இப்தார் விருந்தின் போது நான் கூறிய விடயங்கள் மிகவும் தெளிவானவை. அந்த இடத்தில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தைக் கட்ட முடியுமானால், ஒரு யூதவழி பாட்டுத் தலத்தைக் கட்ட முடியுமானால், அல்லது ஒரு இந்துக் கோவிலைக் கட்டமுடியுமானால், இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களை நாம் வேறுவிதமாக நடத்த முடியாது. அதிலும் அந்த இடத்தில் பள்ளிவாசலைக் கட்ட விரும்புபவர்கள் முஸ்லிம்கள் மேலும் அவர்கள் அமெரிக்கப் பிரஜைகள்' என்று ஒபாமா கூறியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்னர் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட பலரின் கடுமையான கண்டன விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கின்றபோதிலும், ஒபாமா அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படைப் பண்பு விழுமியமான சகிப்புத்தன்மையைக் கடுமையாக வலியுறுத்திக் கருத்துத் தெரிவித்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அமெரிக்கா அதன் அரசியலமைப்பைப் போற்றிப் பேணுவதை உறுதி செய்வதென்பது ஜனாதிபதி என்ற வகையில் எனது பணியாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

கண்டன விமர்சனங்களையும் இந்த பள்ளிவாசல் விவகாரத்தில் எனது நிலைப்பாட்டை நான் வாபஸ் பெற்றுவிட வில்லை. நான் பின்னோக்கி நடக்கத் தயாராயில்லை. எந்தவொரு பிரத்தியேகமான கட்டிட நிர்மாணத்திட்டத்தையும் நான் அங்கீகரிக்கவில்லை என்பதே நான் கூறியதாகும். நான் எமது அரசியலமைப்பை அங்கீகரிக்கிறேன். அது சரியானதே, முஸ்லிம் அமெரிக்கர்கள் இராணுவச் சீருடையில் ஈராக்கில் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது மதநம்பிக்கை எமது அரசியலமைப்பின் கீழும் எமது அரசாங்க முறையின் கீழும் குறைந்தளவு மதிப்பைக் கொண்டது என்று எவ்வாறு அவர்களுக்கு நாம் கூறமுடியும்? அவர்கள் தங்கள் உணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு கொண்டிருக்கும் உரிமையை நான் பாதுகாப்பேன் என்று ஒபாமா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

# 'பணம் சம்பாதிக்கும் நோக்கில் நான் அரசியலுக்கு வரவில்லை'

அரசாங்கம் பற்றி தமிழ்மக்கள் மத்தியில் பொய்யான கருத்துகள் பரப்பப்படுவதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக கண்டி மாவட்டத்திலிருந்து பாராளுமன்றம் தெரிவான புதிய எம்.பி.திலும் அமுனுகம தெரிவித்தார்.

*Saturday* மெயிலுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு;



**கேள்வி: உங்களது குடும்ப, கல்விப் பின்னணி பற்றி?**

**பதில்:** குடும்பத்தைப் பொறுத்த வரையில் எனது தந்தை அசோக அமுனுகம. ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவர். தாய் ஷேர்தி பெரேரா. எனக்கு சகோதரி ஒருவர் இருக்கிறார். பிரதிநிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம எனது பெரிய தந்தை. கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் கண்டி திரித்துவக் கல்லூரியில் எனது பாடசாலைக் கல்வியை மேற்கொண்டேன். அதன் பின்னர் இங்கிலாந்து சென்று சிறிது காலம் படித்தேன். தனியார் ஏற்றுமதி நிறுவனமொன்றில் உதவி முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளேன்.

**கேள்வி: உங்களது அரசியல் பிரவேசத்துக்கான காரணம்?**

**பதில்:** பெரிய தந்தை சரத் அமுனுகமவே எனது அரசியல் பிரவேசத்துக்குக் காரணம். நான் அரசியலுக்குப் பிரவேசிப்பதற்கு முன்னரும் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். பெரிய தந்தையார் அமுனுகம ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி அமைப்பாளராக இருந்த போதே 2000 ஆம் ஆண்டில் நான் முதன் முறையாகக் கண்டி மாநகர சபைக்குப் போட்டியிட்டேன். எனினும் நான் அதில் வெற்றிபெறவில்லை. அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு 48 ஆயிரம் விருப்பு வாக்குகள் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றேன். இதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட்டு 77 ஆயிரம் வாக்குகளுடன் 2 ஆவது இடத்தைப் பிடித்தேன். இவற்றை அடுத்தே இவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றம் தெரிவானேன்.

**கேள்வி: அரசியலில் உங்களது நோக்கம்?**

**பதில்:** ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களுக்கு உதவி, ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்பதே எனது நோக்கம். எனக்கு இப்போது 29 வயதாகிறது. எனினும் நான் பிறந்ததிலிருந்து யுத்தம் நிலவிய நாட்டையே கண்டிருக்கிறேன். கடந்த சில காலமாகத் தான் அமைதியான சூழ்நிலையொன்றை நாட்டில் காணமுடிகிறது. நாட்டில் அபிவிருத்தியும் நடக்கிறது. எனவே ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களுக்கு உதவுவதே எனது நோக்கம்.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வு அனுபவம் பற்றி?**

**பதில்:** அது மிகவும் புதியதோர் அனுபவமாக இருந்தது. நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோரே தெரிவாகுவார்கள். அவர்களில் ஒருவனாக நானும் இருப்பதையிட்டு சந்தோஷமாக இருக்கிறது. சபைக்குள் முதன் முறையாக நுழைந்ததும் இந்த உயரிய ஸ்தானத்திற்கு மக்கள் என்னைத் தெரிவு செய்திருப்பதையிட்டு பெருமையாக இருந்தது. மக்களுக்குப் பல சேவைகளை செய்ய வேண்டுமென்ற உணர்வும் ஏற்பட்டது. மக்களுக்காக நிறைய பணிகளைச் செய்யக் கூடிய இடம் இதுவென்பதும் புரிந்தது.

**கேள்வி: புதிய இளம் எம்.பி.க்களுக்கு இடையிலான நட்புறவுகள் பற்றி?**

**பதில்:** புதிய எம்.பி.க்களுக்கு இடையிலான நட்புறவு மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது. முன்னொரு போதும் இல்லாத வகையில் ஆளுந்தரப்பு எதிர்த்தரப்பிலும் இளம் எம்.பி.க்கள் அதிகமானோர் இம்முறை பாராளுமன்றம் தெரிவாகியுள்ளனர். சபைக்குள் நாம் விவாதங்களின் போது தர்க்கம் செய்து கொண்டாலும் அது சபைக்குள் மட்டும் தான். வெளியில் நாம் மிகுந்த நட்புறவுடன் பழகுகிறோம்.

**கேள்வி:பாராளுமன்றத்தின் நிலைமைகள் பற்றி?**

**பதில்:** முன்னொரு போதும் இல்லாத வகையில் இம்முறை பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாக அதிக எண்ணிக்கையிலான எம்.பி.க்கள் இருக்கின்றனர். ஆளுந்தரப்பு எம்.பி.க்களுக்கு எதிரணி பக்கமும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். இன்னும் எதிரணியில் இருந்து கொண்டும் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். எனவே பாராளுமன்றத்தினுள் சிறந்த நிலைமையே நிலவுகிறது.

**கேள்வி: அரசியல் தவிர்ந்த வேறு ஏதேனும் துறைகளில் ஈடுபாடு இருக்கிறதா?**

**பதில்:** அரசியலை விட்டால் வேறு எதுவும் கிடையாது. எனினும் பணம் சம்பாதிக்கும் நோக்கில் நான் அரசியலுக்குப் பிரவேசிக்கவில்லை. எனவே எனது வருமானத்திற்கென நான் எனது நண்பர்களுடன் இணைந்து ஏற்றுமதி வியாபாரமொன்றிலும் ஈடுபட்டு வருகிறேன்.

**கேள்வி:மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தைப் பற்றி பொய்யான கருத்துகள் பரப்பப்படுகின்றன. அரசாங்கம் பணத்துக்காகவும் சுயநலத்துக்காகவுமே செயற்படுவதாக அம்மக்கள் மத்தியில் எடுத்துக்காட்ட எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். இது குரோதமும் பொறாமையும் கொண்ட செயற்பாடு. இதனால் தமிழ் மக்களுக்கு நல்லது எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இன்று வடக்கு,கிழக்கில் அரசாங்கம் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அனைத்தும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2 நாட்களில் அனைத்தையும் செய்து முடித்து விடமுடியாது. புதிய எம்.பி.க்களான நாமே மாதமொன்றில் 2 வாரங்களுக்கு வடக்கில் இருந்தே பணிபுரிகிறோம். இதனால் நாம் அங்கு சென்று தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.

நான் கண்டியில் தான் போட்டியிடுவேன். நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டையில் போட்டியிவார். எனவே மக்களுக்கான சேவையையே நாம் அங்கிருந்து செய்கிறோம். யார் என்ன வதந்திகளைப் பரப்பினாலும் அங்குள்ள மக்களுக்கு உண்மை என்ன வென்பது தெரியும்.

**டிட்டோ குகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீடு செய்யும் திறன்



**கணவன்:** பெண்களை விட ஆண்கள் விடயங்களைப் பற்றி நிதானமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்யக்கூடியவர்கள் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

**மனைவி:** அதுசரிதான், நீங்கள் என்னை மணந்திருக்கிறீர்கள். நான் உங்களை மணந்திருக்கிறேன்.

## வெட்கப்பட வேண்டியவர்கள்



'நீ உண்மையில் வெட்கப் பட வேண்டும். உனது வயதில் ஏபிரஹாம் லிங்கன் தினமும் தனது வீட்டில் இருந்து 10 மைல் நடந்து சென்று பாடசாலையில் படித்துவந்தார்' என்று தந்தை யார் சிறுவயது மகனை ஏசினார். தந்தையைப் பார்த்து மகன் சொன்னான்; ஆமாம், நீங்களும் தான் வெட்கப்பட வேண்டும், உங்கள் வயதில் ஏபிரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதி ஆகி விட்டார்.

## நீந்தத் தெரியாத மனநோயாளி



மனநோய் மருத்துவமனையில் மூன்று நோயாளிகளுக்கு அவர்களின் உள ஆரோக்கியத்தின் மேம்பாட்டை அறிந்து கொள்வதற்காகத் தலைமை மருத்துவ நிபுணர் சோதனை யொன்றைச் செய்யவிரும்பினார்.

இந்தச் சோதனையில் சித்திபெறுபவர்கள் மருத்துவமனையில் இருந்து வீடுசெல்ல அனுமதிக்கப்படுவர். அவர்கள் சித்தி பெறத் தவறினால் மேலும் 7 வருடங்களுக்கு அந்த மருத்துவ மனையில் இருந்து சிகிச்சை பெறவேண்டும்.

மூன்று நோயாளிகளையும் நீச்சல் தடாகத்துக்கு மருத்துவ நிபுணர் கூட்டிச் சென்றார். தடாகத்தில் குதித்து விளையாடுவதற்கு உயரத்தில் கட்டப்பட்டிருந்த மேடையில் இருந்து குதிக்குமாறு அவர்களை மருத்துவ நிபுணர் கேட்டார்.

முதலாவது நோயாளி உடனடியாகவே பாய்ந்து குதித்து தண்ணீர் நிரப்பப்படாத தடாகத்தில் வீழ்ந்து கைகால்களை முறித்துக் கொண்டார்.

இரண்டாவது நோயாளியும் அவ்வாறே வீழ்ந்து கை காலை முறித்துக்கொண்டார்.

மூன்றாவது நோயாளி குதிப்பதற்கு மறுத்துவிட்டார். ஏன் என்று மருத்துவ நிபுணர் கேட்டதற்கு அவர் 'எனக்கு நீந்தத் தெரியாது டாக்டர்' என்று பதில் சொன்னார்!

## மரணத்துக்கு முன்னர் பேசிய மனச்சாட்சி



ஒருவர் மரணப்படுக்கையில் இருந்தார். அருகில் அவரது மனைவி இருந்தார்.

கணவர்: நான் இறப்பதற்கு முன்னர் சில உண்மைகளை உன்னிடம் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். அப்போதுதான் எனது மனச் சாட்சியைத் தெளிவாக்கிக் கொண்டு நிம்மதியாக இறக்க முடியும்.

மனைவி: அப்படியா, சரி எதுவாக இருந்தாலும் சொல்லி விடுங்கள்.

கணவர்:உனது நெருங்கிய நண்பியுடனும் உனது தங்கையுடனும் உனது தாயாருடனும் நான் தகாத உறவு வைத்திருந்தேன்.

மனைவி:அதுவா, அது எனக்கு ஏற்கனவே தெரிந்ததுதானே. உங்களுக்கு படிப்படியாக பல நோய்கள் வரக்கூடியதாக ஒருவித நச்சுப் பொருளை பாலுக்குள் கலந்து சில மாதங்களுக்கு முன்னரே நான் கொடுத்தேன்.

## பிறந்தநாள் பரிசு



**கணவன்:** உங்களது பிறந்தாள் வருகிறது நான் என்ன பரிசை வேண்டித் தரவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

**மனைவி:** எனக்குத் தேவையானது விவாகரத்து.

**கணவன்:** மன்னிக்கவும் அந்தளவுக்கு பெரிய தொகை பணத்தைச் செலவிடும் எண்ணம் எனக்கில்லை.

## ஏன் புதைக்க முடியாது?

**ஜோன்:** அமெரிக்காவில் வாழும் ஒருவரை கனடாவில் புதைக்க முடியாது ஏன்?

**பீற்றர்:** ஏனென்றால் அவர் உயிருடன் இருக்கிறார்.



## பிச்சை போட்ட பெண்



பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒருவருக்கு பெண்ணொருத்தி 50 சதத்தைக் கொடுத்தாள். அந்தப் பெண் பிச்சையெடுத்தவரின் சகோதரி. ஆனால், பிச்சையெடுத்தவர் அப் பெண்ணின் சகோதரர் இல்லை.

இது எவ்வாறு சாத்தியம்?

ஏனென்றால், பிச்சையெடுத்தவரும் ஒரு பெண்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் 'வெளியேற்றும் படலம்'



கொழும்பு மாநகரில் வாழும் வறுமைப்பட்டவர்கள், சேரிவாழ் மக்கள் எந்த நேரத்தில் தமக்கு என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனேயே நாட்களை கடத்த வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் சட்டவிரோத கட்டிடங்கள்,நடைபாதையோர கடைகள்,வீடுகளை அகற்ற வந்த நகர அபிவிருத்தி அதிகார சபையினரும் பாதுகாப்பு அமைச்சும் தற்போது கொழும்பு நகரிலிருந்து 66 ஆயிரம் குடும்பங்களை ஒரேயடியாக அப்பறப்படுத்த முயற்சிக்கின்றமையே குடிசைகளிலும் சேரிகளிலும் வாழும் மக்களை பீதி கொள்ள வைத்துள்ளது.




அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளியேற்றப்படவிருந்த இந்த 66 ஆயிரம் குடும்பங்களில் 45 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களும் 15 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களும் உள்ளடங்குவதாக ஐ.தே.க.எம்.பி.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படப்போகும் 66 ஆயிரம் குடும்பங்களுக்குமான எந்தவித மாற்றுத் திட்டங்களும் இல்லாத நிலையில் மேற்கொள்ளப்படவிருந்த இந்த 'அகற்றல்' நடவடிக்கை தமிழ் அரசியல்வாதிகளின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் அரசு வறிய மக்கள் மீது தொடுத்து வரும் தாக்குதல்கள் தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அபிவிருத்தி குறித்தும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பிலும் அரசு அக்கறை காட்டி செயற்படுகிறது.

கொழும்பு நகரை சுற்றுலாத் தலமாக மையப்படுத்துவதையும் வர்த்தக நகரமாக மாற்றியமைப்பதையும் நோக்கமாகக் கொண்டே நகரப்புறங்களிலுள்ள குடிசைகளையும் சட்டவிரோத கட்டிடங்களையும் நடைபாதை வியாபார நிலையங்களையும் அகற்றிவருகின்றது.

அண்மைக்காலங்களில் நடைபாதை வியாபாரங்களை முற்றுமுழுதாக தடைசெய் மையினால் இன்றுவரை எந்தவித தொழிலும் மேற்கொள்ள முடியாத நிலையில் அவ்வியாபாரிகள் வறுமையோடு போராடி வருகின்றனர்.

'எமக்கு வியாபார நிலையங்கள் அமைத்துத் தருவதாகக் கூறி இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இன்னும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருப்பது கவலை தருகின்றது.எமது எதிர்காலம் என்னவாகும்?வாழ்க்கை கேள்விக்குறியாகிவிட்டது' என வியாபாரி ஒருவர் தனது ஆதங்கத்தைக் கூறினார்.

இதேபோல் கொழும்பு நகரிலுள்ள சகல குடிசை வீடுகளையும் அகற்றி அவர்களுக்குப் பொருத்தமான வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மத்திய கொழும்பு,கொம்பனித்தெருவில் வசித்துவந்த 45 குடும்பங்களை நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரின் கீழ் வெளியேற்றினர்.அவர்களின் வீடுகளை புல்டோசர்கள் மூலம் இடித்து அகற்றினர்.இன்றுவரை அந்த மக்கள் சொந்தக் குடியிருப்புகள் இன்றி சிரமப்படுகின்றனர்.

தொட்டலங்களில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் குடிசைகளில் வாழுமாறு அரசாங்கம் கூறியுள்ளதாகவும் தொடர்ந்தும் அவ்விடங்களில் வாழுமிடத்து பல்வேறு எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவருமென அரச அதிகாரிகள் தெரிவித்ததாக பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில் 'நகர அபிவிருத்தி அதிகார சபையினர் தொட்டலங்கவில் அமைத்து தந்த வீடுகளில் எங்களால் வாழமுடியாது. அவற்றை வீடுகளென சொல்லமுடியாது. சேற்று நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பலகைக் கொட்டில்களாகும்.இங்கு வாய்க்கால்கள் பெருமளவு காணப்படுவதால் துர்நாற்றம் வீசுகின்றது.சுகாதார சீர்கேடுகள் நிலவுவதுடன் எமது பிள்ளைகளின் கல்வியும் பாதிப்படைந்துள்ளது' என்றார்.

உலக குடியிருப்பாளர்கள் தினத்தை முன்னிட்டு பொறியியல் நிர்மாணம்,வீடமைப்பு அமைச்சு அனைவருக்கும் அழகான நகரம் எனும் தொனிப்பொருளில் கொழும்பை மாற்றியமைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;

'தலைநகர்,வடக்கு,கிழக்கு உட்பட நாட்டிலுள்ள 23 மாவட்டங்களில் வாழும் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு 183 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் சட்டவிரோத கட்டிடங்களையும் அகற்றிவருகின்றோம்.

இப்பணிகளுக்கு அமைச்சிலிருந்து 35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.நாட்டின் நகர்ப்புறங்களிலுள்ள சட்டவிரோத கட்டிடங்களால் சுகாதாரம் உள்ளிட்ட அநாவசியமான பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன.எனவே எதிர்காலத்தில் சட்டவிரோத குடியிருப்புகளுக்கு இடமில்லை' என்றார்.

சட்டவிரோத குடியிருப்புகள் எனக்கூறி நகரிலுள்ள குடியிருப்பாளர்களை வெளியேற்றியமை,ஆயிரக்கணக்கான நடைபாதைக் கடைகளை அகற்றியமை அபிவிருத்திப் பணிகளுக்காக இருந்தாலும் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலம் என்னவென்பதை அரசு சிந்திப்பதாகத் தெரியவில்லை.நகரிலுள்ள குடியிருப்புகளை அகற்றுதல் தொடர்பாக மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கூறுகையில்;

அரசாங்கம் திடீரென 'சட்டவிரோத குடியிருப்புகள்' எனக் கூறி 100,150 வருடங்களாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்களை வெளியேற்றுகின்றது.இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசும் மக்கள்.பல வருடங்களாக கொழும்பு வாழ்க்கைக்கு பழக்கப்பட்ட இவர்களால் வேறுபகுதிகளில் வாழ முடியாது.

இவ்வாறு திடீரென அகற்றுவதால் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் தொழில் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் இவர்களின் வாழ்வில் அரசாங்கம் விளையாடுகிறது.

இது ஒரு சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துச் செல்லும்.கடந்த காலங்களிலும் கூட பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எனக்கூறி கொம்பனி வீதியின் பல பகுதிகளிலுள்ள மக்களை அரசு வெளியேற்றியது.அவர்கள் இன்றுவரை சொந்த வீடுகளின்றி தவிக்கின்றனர்.

சட்டரீதியான வீடுகளையும் சட்டவிரோத வீடுகள் எனக்கூறிக் கொண்டு அகற்றுகின்றனர்.கொழும்பு நகரிலுள்ள மக்களில் 100-55 வீதமானவர்கள் தமிழ் பேசும் மக்கள்.இவர்களின் சனத்தொகையை குறைக்கவும் இவர்களின் காணிகளை சுற்றுலாத்துறைக்கு பயன்படுத்தவும் கோடிக்கணக்கில் வெளிநாடுகளுக்கு விற்கவும் தீர்மானித்தே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

சட்டரீதியான வீடுகள் உடைக்கப்பட்டதற்கு எதிராக நாம் வழக்குத் தாக்கல் செய்தோம். இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது' எனக் கூறினார்.

சமூகத்தில் மிகவும் வறிய நிலையிலும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களை இலக்காகக் கொண்டே அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.அரசின் இந்நடவடிக்கைகள் மனித உரிமை மீறல்களாக கருதப்படக்கூடியவை.

சட்டவிரோத கட்டிடங்கள், குடிசைகள், நடைபாதையோரக் கடைகள் என எதை அகற்றுவதாக இருந்தாலும் போதிய கால அவகாசம் கொண்ட முன்னறிவித்தல்களைக் கொடுத்து பாதிக்கப்படப்போகும் மக்களுக்கான மாற்றுத் திட்டங்களை தயார்படுத்திவிட்டே அரசு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.அதை விடுத்து சர்வதிகாரப் போக்கில் நடந்து கொள்வது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கோ அதன் தலைவரான ஜனாதிபதிக்கோ அழகல்ல.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் தொடர்புகளும்
# கருப்பை கழுத்துப் புற்றுநோயும்

ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் தொடர்புகளால் கருப்பை கழுத்துப் புற்றுநோய் ஏற்படுகிறது.

புற்றுநோய் என்றால் எல்லாம் கொடியன அல்ல என்ற உண்மை காணப்படினும் கருப்பைப் புற்றுநோய் சீர்செய்யக் கூடியது. சிரமம் மிக்கது என்றே கருதவேண்டும். அதன் போது அனுபவிக்கின்ற அசௌகரியங்கள் மிகமிக அதிகம் என்றே கூறவேண்டும். இங்கு ஆக்கிரமிப்பு செயற்பாட்டை மேற்கொள்ளாத புற்றுநோய்க்கு முன்னான நிலை காணப்படுகிறது. இந்நிலையில் இவை இனங்காணப்படின் வரவேற்கத்தக்கதொருவிடயமாகும். எனினும் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் மெல்ல மெல்ல ஆக்கிரமிப்பு புற்றாக மாறுவது அது நிகழ்ந்தே தீரும் என்றுதான் சொல்லவேண்டும்.

இங்கு ஆக்கிரமிப்பு வல்லமையுடைய புற்றுநோய் கவனிக்கத் தவறவிடப்படின் கருப்பை கழுத்தின் சுற்றயப் பகுதிகளையும் ஊடுருவிவிடும். இந்நிலையின் முன் இனங்காணப்படின் பெரும்பாலும் குணப்படுத்த முடியும். எனினும் இது தவறுவது என்பது தவறுதலாகவே நடந்தேறும். தவறாகிவிட்டது. இதனால் கருப்பைக் கழுத்தைத் தாண்டிப் பரவி குணப்படுத்தும் தகவை



குறைத்துக்கொள்கின்றது. இங்கு உடலுறவின் பின்னரோ மாதவிடாய் நிறுத்தத்தின் பின் அல்லது மாதவிடாய் தவிர்ந்த காலங்களிலோ ஏற்படும் இரத்தப்போக்கு இதைவிட உடலுறவின் போது வலி மற்றும் யோனிவழியூடாக இரத்தத்துடன் கழிவுப் பொருள் வெளியேற்றம் இவ்வாறு அமைவதுடன் இத்துடன் இவர்கட்கே யென்று துர்நாற்றம் மேலும் இதன் நகர்வை அடிப்படையாகக் கொண்டு 5 வகைப்படும்.

1. தொடக்க நிலையில் அசாதாரண கலங்களை *Pep smeer* சோதனை மூலம் இனங்காணலாம்.
2. கருப்பைக் கழுத்துடன் எல்லைபடுத்தப்பட்ட நிலை.
3. யோனியின் மேற்பகுதிக்குப் பரவியிருத்தல்.
4. யோனியின் கீழ்ப்பகுதிக்குப் பரவியிருத்தல்.
5. பெருங்குடல் சிறுநீர்ப்பை உடலின் ஏனைய பாகங்களுக்குப் பரவி தனது ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

இவற்றின் பரவல் இவ்வாறு இருக்க ஆய்வுக் கற்கைகளை ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் தொடர்பு கனதியாகவே நிரப்பியவண்ணமுள்ளது. ஆண்களில் காணப்படக்கூடிய மனிதப் பபிலோமா வைரஸுக்களின் இனப் பெருக்கச் சுரப்பிகளினூடானப் பரவல் இந்நோய்க்கான காரணமாகக் கருதப்படுகிறது. இதனால் பல ஆண்களுடனான பாலியல் தொடர்பு கருப்பை கழுத்து புற்றுநோயில் காத்திரமாகவே பங்களிக்கின்றது. ஆய்வுக் கற்கைகளும் அவ்வண்ணமே நகர்கின்றன.

டாக்டர்
வெ.நாகநாதன்

# ஒரு அப்பிளும் டைனோசரும்

டைனோசருக்கு பலம் அதிகமா அல்லது அப்பிளுக்கு பலம் அதிகமா என்று யாராவது கேட்டால் நாம் நிச்சயம் அவரைப் பார்த்து சிரித்திருப்போம்.என்ன சின்னப்புள்ளத்தனமா இருக்கு என்றிருப்பார் நம் வடிவேலு.

ஆனால் 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியை தாக்கிய மாபெரும் எரிகல்லால் ஏற்பட்ட பயங்கரமான சுற்றுச் சூழல் மாற்றங்கள் தான் பல லட்சம் அணுகுண்டுகள் வெடித்தால் ஏற்படும் அளவுக்கு சேதம் பூமியில் உண்டானது. அப்போது எழும்பிய தூசு மண்டலம்,சூரிய ஒளியை பல்லாண்டுகள் மறைத்ததால் உலகின் பெரும்பாலான தாவரங்கள் அழிந்து அதை நம்பி வாழ்ந்த மிருகங்களையும் அழித்தது.குறிப்பாக டைனோசர்களை சுவண்டோடு ஒழித்துக் கட்டியது என்பது வரலாறு.


ஆனால் அதில் தப்பிப் பிழைத்த ஒரு சில தாவர வகைகளில் ஒன்று அப்பிள் என்பது சமீபத்திய 'ஜீனோம்' ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

அப்பிளின் சுமார் 600மில்லியன் அடிப்படை டி.என்.ஏ.க்களை சமீபத்தில் அக்குவேறு ஆணிவேறாக வகைப்படுத்தி (Genome Profiling) முடித்துள்ளனர் நியூசிலாந்து விஞ்ஞானிகள்.அப்பிளின் நிறம்,சுவை,அதன் ஜூஸ் தரும் தன்மைக்கான காரணங்களை ஆராய்வதற்காகவும் இந்த குணங்களை அதிகரித்து மிகச் சுவையான அப்பிள்களை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட ஆராய்ச்சி தான் இது. ஆனால் இந்த ஆராய்ச்சி நம்மை டைனோசர்களின் கதையை நோக்கிக் கொண்டு போயுள்ளது.

அப்பிள்களுக்கு மிக நெருக்கமான இனத்தைச் சேர்ந்த ஸ்ட்ராபெர்ரி உள்ளிட்ட தாவர வகைகளில் 7 அல்லது 8 குரோமோசோம்கள் தான் உள்ளன. [நமது ஜீன்களை ஏந்திய டி.என். ஏ.க்களை கொண்ட செல் உறுப்புதான் குரோமோசோம்] ஆனால் அப்பிள்களில் 17 குரோமோசோம்கள் உளளது சமீபத்திய 'ஜீனோம்' ஆராய்ச்சியில் [டி.என்.ஏ.க்களை வரிசைப்படுத்தல்] தெரியவந்துள்ளது.

அப்பிளின் தற்காப்பு சக்தியை அதிகரிக்கும் திறன் கொண்ட இந்த குரோமோசோம்கள் இரண்டு முறை உருவாகியுள்ளன.அதாவது 'டூப்ளிகேட்' ஆகியுள்ளன. இதனால் தான் அப்பிள் குடும்பத்தைச் சேர்ந்த பிற தாவரங்களில் 8 குரோமோசோம்கள் இருக்க அப்பிளில் மட்டும் 17 குரோமோசோம்கள் உள்ளன. இந்த டூப்ளிகேசன் நடந்தது 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன். அந்த சமயத்தில் தான் பூமியின் இன்னொரு முக்கிய நிகழ்வும் நடந்தது. அந்த காலகட்டத்தில் தான் டைனோசர்கள் சுவண்டோடு அழிந்தன. இந்த இரு தனித்தனி சம்பவங்களுக்கும் ஒரே காரணம் இருந்திருக்கலாம் என்பதுதான் விஞ்ஞானிகள் சொல்லும் சுவாரஸ்யமான தகவல்.

எரிகல் தாக்கி தாவர இனங்கள் அழிந்தபோது தாக்குப் பிடித்த ஓரிரு இனங்களில் அப்பிளும் ஒன்று என்கிறார்கள் இந்த ஆராய்ச்சியாளர்கள். அந்த கால கட்டத்தில் தப்பிப் பிழைக்க அப்பிள் இனத்தில் நடந்த 'சம்பவம்' தான் குரோமோசோம் டூப்ளிகேசன் என்கிறார்கள்.



ஏ.கே.கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதையில்லாத பெண்



வயது 50, இரண்டு குழந்தைகளுக்கு தாய், இப்படிப்பட்ட பெண், தோற்றத்தில் எப்படி இருப்பார்? நீங்கள் கற்பனை செய்யும் அளவிற்கு அந்த பெண் இல்லை. எட்டு வயது பெண் குழந்தை அணிய வேண்டிய ஆடையைத்தான் அந்த பெண் அணிகிறார். அவர் எடையோ வெறும் 37 கிலோ தான். உடலில் சதையே இல்லாமல் எலும்பும் தோலுமாக உள்ள இந்த அதிசயப் பெண் பிரிட்டனில் வசிக்கிறார். இவர் பெயர் கரோல்.

கரோலினின் கணவர் ஸ்டீவன், வயது 50 இவர் ஒரு பெயின்டர். கரோலுக்கு உடலில் எந்த நோயும் இல்லை. எல்லா பெண்களையும் போல நன்றாக சாப்பிடுகிறார் மிகவும் சத்துள்ள உணவு வகைகளை வெளுத்துக் கட்டும் இவருக்கு உடலின் எடை மட்டும் அதிகரிப்பதே இல்லை. உடலில் எங்கும் கொழுப்பு தேங்குவதே கிடையாது. சதை போடாததால் எலும்பும் தோலுமாக காட்சியளிக்கிறார்.

கரோல் அணியும் ஷூ சைஸ் 2. ஆதாவது பள்ளி குழந்தைகள் அணியும் ஷூ தான் இவருக்கு பொருத்தமாக இருக்கிறது. இடுப்பு சுற்றளவு 22 அங்குலம். ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் ஒரு முறை இவர் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார். எனினும், இவர் உடலில் கொழும்பு மட்டும் சேர்வதே கிடையாது.

பிறந்த போது மிகவும் ஆரோக்கியமாக, கொழு கொழு குழந்தையாகத் தான் இருந்தார். 4 ஆவது வயதிலேயே இவர் உடலில் மாற்றம் தெரிய ஆரம்பித்து விட்டது 15 ஆவது வயதில் டாக்டர்களை பார்த்தார். அவர் உடலை சோதித்த டாக்டர்கள், எந்த நோயும் இல்லை. ஆனால், திருமணம் ஆகி குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. உடல் நொறுங்கிப்போகும் நிலையில் உள்ளது என்றனர். எனினும் ஸ்டீவனை திருமணம் செய்து, மார்க், நீல் என இரண்டு மகன்களைப் பெற்றெடுத்தார்.

இதை வளர்ச்சி குறைபாடு பிரச்சினையால் கரோல் பாதிக்கப்பட்டுள்ளார். இது மிகவும் அபூர்வமான நோய். உலகில் இரண்டே பேர் தான் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னொரு பெண் அமெரிக்காவில் வசிக்கிறார். அவர் பெயர் லிஸ்சி வேலாஸ்கியூஸ் இவர் எடை வெறும் 24 கிலோ தான்.

இது பற்றி கரோல் கூறியதாவது;

அமெரிக்காவிலும் என்னைப் போல் ஒரு பெண் இருக்கிறார் என, படித்த பின்னர் தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. துணிச்சலான பெண்ணிற்கு இருக்கும் இதயம் எனக்கு உள்ளது. எனக்கு மிகவும் நல்ல கணவர் கிடைத்துள்ளார். அதுவே எனக்கு சக்தியை கொடுக்கிறது. மக்கள் என்னை வினோதமாக பார்க்கின்றனர். அதனால், அவர்கள் கண்களில் படாமல் இருந்தேன். இனி, அப்படி இருக்க மாட்டேன் என் தோற்றத்திற்கு நான் காரணம் அல்ல. எனவே, இனியும் மறைந்து வாழ மாட்டேன். இவ்வாறு துணிச்சலாக கூறினார்.

# இதுக்குமா...?



எதை எதைத் தான் காப்புறுதி செய்வது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது நடிகைகளுக்கு. தனது 'பின்புறம்' மிக அழகாக, அம்சமாக இருப்பதாகக் கருதும் இந்தி நடிகை மினிஷா லம்பா அதைக் காப்புறுதி செய்யவுள்ளாராம்.

தங்களுக்கு அழகு சேர்க்கும் அழகான வாழைத் தொடை, அழகிய கால்கள், அம்சமான முகம் ஆகியவற்றைக் காப்புறுதி செய்வது நடிகைகளுக்கு வழக்கமாகி விட்டது. ஹொலிவூட்டில் அழகான எடுப்பான முன்னழகைக் கூட காப்புறுதி செய்கிறார்கள்.

இந்த வரிசையில் படு வித்தியாசமாகத் தனது பின்புறத்தைக் காப்புறுதி செய்யவுள்ளார் இந்தி நடிகை மினிஷா லம்பா. இவர் மினி ஆடைகளில் கவர்ச்சிகரமாக வருவதை ஒரு கொள்கையாகவே வைத்திருப்பவர். காஷ்மீரில் பிறந்த அழகு ரோஜா.

பின்புறத்தைப் பாதுகாப்பாகக் காப்புறுதி செய்வது இது முதல் முறையல்ல. சமீபத்தில் நடிகர் ஜான் ஆப்ரகாம் கூட தனது பின்புறத்தைக் காப்புறுதி செய்தார். அவர் வழியில் இப்போது மினிஷாவும் பின்புறத்தைக் காப்புறுதி செய்யப்போகிறாராம்.

தனது பின்புறம் மிக அழகாக, எடுப்பாக, செக்ஸியாக இருப்பதாகப் பெருமையுடன் கூறுபவர் மினிஷா. பிரேஸில் பெண்களுக்குத் தான் இப்படி எடுப்பாகப் பின்புறம் இருக்கும். உங்களுக்கும் அதுபோலவே இருக்கே என்று பலரும் பாராட்டிக் கூறுகிறார்களாம். இதைப் பார்த்து புளகாகிதமடைந்து போன மினிஷா இப்போது அதைக் காப்புறுதி செய்ய முடிவு செய்துள்ளாராம்.

எனது பின்புறம் எனக்குப் பொக்கிஷம் போல. அதைக் காக்க நான் விரும்புகிறேன். எனவேதான் காப்புறுதி எடுக்க முடிவு செய்துள்ளேன் என்கிறார் பெருமிதத்துடன்.

முன்னாடி காப்புறுதி செய்யலாம், பின்னாடியுமா, அடி ஆத்தாடி...

# சிறுநீரகத்தை கெடுக்கும் 'பொதி' உணவுகள்

பொதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்களால் சிறுநீரகங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக மருத்துவ நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள், நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுப் பண்டங்களை வாங்கி பயன்படுத்துகின்றனர். நேர விரயத்தைத் தவிர்ப்பதைத் தவிர, இந்த உணவுப் பண்டங்களால் வேறு பயன் இல்லை. மாறாக, உடலுக்கு தீங்கையே அவை விளைவிக்கின்றன என்று மருத்துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இதுகுறித்து, மும்பை மருத்துவ அறிவியல் மைய பேராசிரியர் டாக்டர் கிருபாளினி, மும்பை ஏசியன் இருதய மருத்துவமனையின் சிறுநீரகத் துறை மருத்துவம் உமேஷ் கன்னா உள்ளிட்டோர் கூறியதாவது;

பொதி செய்யப்படும் உணவுப் பண்டங்கள் கெட்டுப் போகாமல் இருப்பதற்கும் கவர்ச்சியாகத் தெரிவதற்கும் அதில் செயற்கையான வண்ணக் கலவைகள், அதிகப்படியான உப்பு, இரசாயன பவுடர்கள் உள்ளிட்டவை பயன்படுத்தப்படுகின்றன. அவைகள் மனித சிறுநீரகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தற்போது சிறுநீரக நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆண்டுதோறும் பலர் சிறுநீரகம் செயலிழப்பால் பாதிக்கப்படுகின்றனர். சிறுநீரக நோய்க்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் மாறிவரும் உணவுப் பழக்கங்கள் முக்கிய காரணமாக உள்ளன.



நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள், தற்போது பொதிகளில் அடைக்கப்பட்ட உணவுப் பண்டங்களைப் பயன்படுத்துகின்றனர். இந்தப் பண்டங்களில் எந்தவிதமான சத்துகளும் இருப்பதில்லை.

மாறாக, உடலுக்குத் தீங்கு இழைக்கக் கூடிய இரசாயனங்கள் தான் உள்ளன. மேலும், சிறுநீரகம் தொடர்பாக சிறுசிறு பாதிப்பு இருப்பவர்களுக்கும் இந்த உணவுப் பண்டங்கள் நோயை அதிகப்படுத்துகின்றன. சிறுநீரக பாதிப்பு உள்ளவர்கள் பொதி உணவுப் பொருட்களை அறவே தவிர்ப்பது நல்லது. பழங்கள், பழச்சாறுகள், காய்கறிகள் உள்ளிட்ட இயற்கை உணவு பொருட்களை எடுத்துக்கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## யாருடைய கடமை இது?

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி.இன்று நோயற்று வாழ்பவர்களே குறைவாக காணப்படுகிறார்கள். அதனால் அவர்கள் தம் நோயை குணப்படுத்த வைத்தியசாலையை நாடுகிறார்கள். தமது பொருளாதார வசதியினை கருத்திற்கொண்டு பெரும்பாலும் அரசாங்க வைத்தியசாலைகளையே நாடுகிறார்கள். இன்று பொதுவாக கூடுதலான மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையையே நாடுகின்றனர்.அங்கு நாம் காணும் சில விடயங்கள் மிகவும் மன வருத்தம் தரக் கூடியதாக இருக்கிறது.

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு நான் வீதியில் போனபோது ஒரு விபத்து நடந்தது. எனக்கும் அறிந்தவர்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து வைத்தியசாலைக்கு சென்றேன்.தலையின் பின்பகுதி காயப்பட்டு இரத்தம் வெளியேறிக் கொண்டு இருந்தது. எனது நண்பி அந்த காயம்பட்ட பெண்ணுடன் உள்ளே சென்றார். அங்கே வந்த சிற்றூழியப் பெண் 'இங்கே வா. இதை துடை' என்றார். நான் யாரை கூப்பிடுகிறார் எனப் பார்த்தேன். எனது நண்பியை. 'இந்தா பஞ்சு. இதை எடுத்துப் போய் இரத்தம் ஒன்றும் இல்லாமல் துடைத்து போட்டு கூப்பிடு' இது சிற்றூழியப் பெண்ணின் உத்தரவு. அந்த காயம்பட்ட பெண்ணை தூக்கி அவருக்கு உதவ யாரும் இல்லை.

அதேநேரம் வேறொரு ஆண் சிற்றூழியர் வந்தார். அந்த காயம்பட்டவரை நிமிர்த்த உதவி செய்தார். ஆனால் அந்த பெண் சிற்றூழியர் அதை கண்டு கொள்வதாய் இல்லை. அவர் வெளியே வந்து இருந்த எம்முடன் கதைத்துவிட்டு சென்றுவிட்டார். பின்பு வந்தார். 'நீ இன்னும் துடைத்து முடியவில்லையா?' என்று கேட்டார். நான் மட்டுமல்ல வேறு வெளியில் இருந்தவர்களுக்கும் இவரின் நடவடிக்கை சினத்தை உண்டுபண்ணியது. நோயாளி என்பவர் எந்த விதத்திலும் இந்த சிற்றூழியர்களுக்கு குறைந்தவர்கள் அல்ல. அவர்கள் தம் நோயினால் மனம் பாதித்து கொண்டு இருக்கும்போது இவர்கள் நடவடிக்கை மேலும் வேதனை அடைய செய்கிறது.

நோயாளர்களை நீ ஏன் அப்படி செய்தாய்? இங்கே வா. அங்கே போ என ஏதோ அடிமைகளுக்கு கட்டளை இடுவது போல் நடத்துகிறார்கள். இதனை வைத்தியசாலை நிர்வாகம் கருத்திற் கொள்ள வேண்டும். அடுத்து எனக்கு தோன்றிய சில கேள்விகளை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு முன் சமர்பிக்கிறேன்.

1. வைத்தியசாலைக்கு வரும் காயப்பட்டு அதாவது விபத்து ஏற்பட்டு வரும் நோயாளியின் இரத்தம், உடை என்பவற்றை சுத்தம் செய்ய வேண்டியது யார் கடமை?

சிற்றூழியர்களுடையதா அல்லது வீதியிலே அடிபட்டு கிடக்கிறாரே என்ற அனுதாபத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்ப்பிக்கும் நல்ல மனம் படைத்தவர்களுடையதா?

2. வந்த நோயாளியை இவர்கள் சுத்தம் செய்கிறார்களா என்பதனை கவனிக்க யாருமே வைத்தியசாலையில் இருப்பதில்லையா?

3. சிற்றூழியர்கள் இவற்றை செய்வதில்லை என்றால் சிற்றூழியர்கள் செய்யும் கடமைகள் என்ன?

4. சிற்றூழியர்கள் பேசுவதை பார்த்தும் கூட அதனை கண்டும் காணாததுபோல் வைத்தியசாலை நிர்வாகத்தினர் செல்லும் காரணம் என்ன?

இப்படியான வினாக்கள் என் மனதில் மட்டுமல்ல இன்று வைத்தியசாலை செல்லும் பல நோயாளர்களின் வினாவாகவே காணப்படுகின்றது? ஆனால் சரியான பதில் இதுவரை எவருக்கும் கிடைத்ததாய் இல்லை.

**சுபோதினி**

## இளம் சந்ததிக்கு...

உங்களுடைய இள வயதிலே, இள இரத்தத்தின் துடிப்பிலே எத்தனையோ விடயங்களை சாதிக்கலாம், வென்றிடலாம். சோம்பேறிகளாக சோம்பல் பட்டு வாழ்க்கையை வீணடித்து விடாதீர்கள்.

உங்களுடைய உழைப்பின் சேமிப்புத்தான் உங்கள் எதிர்காலத்தை உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை, நிம்மதி, சந்தோஷத்தை நிர்ணயிக்கின்றன.

ஏதோ கல்யாணம் என்றதும் சொர்க்கத்திற்கே போவதாக எண்ணிக்கல்யாணம் முடிப்போருக்கு அதன் பின்னர் தான் இடர்பாடுகளும் இடிபாடுகளும் ஆரம்பமாகின்றன.

புதுச்சேலை, புதுநகை என்று மனைவி மூலம் ஆரம்பிக்கும். கோயில், சினிமா பார்க்க ஆசைப்படுவாள். நியாயமான ஆசைதானே. உங்கள் கையில் இருப்பு இல்லாதிருந்தால் நிலைமை என்னவாகும். ஒரு வருடத்தில் அப்பா ஆகி விடுவீர்கள். பின் என்ன கொண்டாட்டம் தானே. குழந்தை எனும் போது அடிக்கடி நோய்கள் வரலாம். பயத்திலே ஆஸ்பத்திரிக்கு ஓட வேண்டும்.

நல்லது, கெட்டது, குழந்தை, மனைவி என்று ஏகப்பட்டது இருக்கிறது. இதெல்லாம் கட்டாய செலவு என்பதோடு உங்களுடைய கடமையும் கூட. உங்களுடைய வருமானத்தில் தான் குழந்தைகளின் எதிர்காலமே அடங்கியுள்ளது. இன்றைய நிலையில் பாடசாலையில் சேர்ப்பதற்கே இலட்சங்கள் தேவைப்படும். அத்தோடு 'டியூசன்' என்கின்ற பூதம் உங்களை ஒரு ஆட்டு ஆட்டிவிடும். உங்கள் பிள்ளைகளும் மற்றப் பிள்ளைகளோடும், படிப்புச் சூழலோடும் ஒத்துப் போக முடியும். இது காலத்தின் கட்டாயமும் கூட. உங்கள் தாத்தா, பாட்டி காலம் போல் மணலிலும் அரிசியிலும் 'அ' எழுதி கல்லிலும், புளியங்கொட்டையிலும் 1,2 எண்ணும் காலமல்ல இக்காலம். இதெல்லாம் இளைஞர்களாக அப்பா, அம்மா ஆதரவோடு இருக்கும் போது தெரிவதில்லை. குடும்பம் என்னும் உறவுப் பெருக்கத்திற்குள் காலை வைக்கும் போது தான் அவதிப்பட நேரிடும். எனவே இளைஞர்களே சீதனத்தையோ, சொத்தையோ



எதிர்பாராமல், நம்பாமல் உங்கள் உழைப்பை சேமிப்பை நம்புங்கள். பெருக்குங்கள். இல்லை என்பது எதுவுமே இல்லை. முடியாது என்றால் முடியாது தான்.

**ரேவதி பாலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய சுவை...

# இயற்கையோடு இயைந்த வாழ்வு

சங்கப் பாடல்களின் முக்கிய சிறப்பியல்பு மானிட வாழ்வின் மீது, அதன் இன்ப, துன்பங்களின் மீது அதற்குள்ள அக்கறையே யாகும். ஆனால், எந்தவொரு பாடலும் இயற்கையை விட்டு முற்றிலும் விலகி நிற்க இயலாது. இயற்கை மானிட வாழ்வின் ஒரு நாடகம் அரங்கேறும் மேடையாகவும் பின்னணியாகவும் சங்க இலக்கியத்தில் இடம்பெறுகிறது.

இயற்கை அதன் எல்லாத் தன்மைகளிலும் முக்கியத்துவம் பெற்று மனித வாழ்க்கையை வண்ணமயமாக்குகிறது. அதாவது, இயற்கையின் முன்னிலையில் மனிதன் பெறும் உணர்ச்சிகளைத் தெளிவாகக் காட்டுகிறது. காதலனைப் பிரிந்து துயருறும் தலைவிக்கு கடல்நீரின் 'இழும்' என்னும் ஓசை தன் சொந்த அழுகுரலைப் போலவே கேட்கிறது (கலி.129). கடல் அவளோடு சேர்ந்து அழுவதாகத் தோன்றுகிறது. சிலவேளைகளில் முரண்பாட்டுக்குரல் ஒலிக்கிறது. எதிர்ப்பு அல்லது அலட்சியம் உணரப்படுகிறது. அதே தலைவி, சில வேளைகளில் அலைகள் நிரம்பிய கடல் அவளுடைய துயரங்களை ஒரு பொருட்டாகக் கருதாமல் இரக்கமற்று இருப்பதாகவும் உணர்கிறார் (ஐங்.141). இவ்வாறு மாறிவரும் மனநிலைகளின் அழுத்தத்தைக் காட்ட சங்கப் புலவர்கள் இயற்கையைக் கருவியாக்கிக் கொண்டனர். இது உணர்வைப் பலப்படுத்த இயற்கையைப் பயன்படுத்திய நிலை.

அதே இயற்கை உணர்வை ஏற்படுத்துவதும் உண்டு.

இயற்கையின் வருணனை நம் கண்முன் காட்சியாய் விரியும் வண்ணம் அமைந்து சிறக்கிறது. கண்டும் கேட்டும் இன்புறுதற்கான நாட்டியக் கலையின் சொல்லோவியத்தை அகநானூற்றுப் பாடல்களில் காணலாம். இனிமையும் எழிலும் கொண்டமைந்த ஆடற்கலை, சங்ககாலத் தமிழ்மக்களின் கலை வாழ்க்கையில் உயர்ந்த இடம் பெற்றுத் திகழ்ந்தது. அவர்களுடைய பண்பாடுமிக்க வாழ்க்கையைத் தம் பாடல்களில் புலவர்கள் பாடி அக்கலைச் சிறப்பைப் போற்றியுள்ளனர். மக்கள் மன்றத்திலும் மன்னர் அவையிலும் செல்வாக்குப் பெற்றமையால் புலவர்கள் நாவிலும் கற்பனையிலும் அக்கலை இடம்பெற்றது. அகநானூற்றில் இடம்பெற்ற கபிலரின் இக்கற்பனை ஓவியம், குறிஞ்சி நிலவளத்தையும் நலத்தையும் குறிக்க எழுந்ததாயினும் தமிழ்மக்களின் வாழ்வில் அன்று சிறப்பிடம் பெற்றிருந்த இசையும் நாடகமும் எய்திருந்த சிறப்பை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

குறிஞ்சி, எழில் நலமிக்க நீலமலைச்சாரல்; அங்கு நெடிது வளர்ந்து அசைந்தாடி நிற்கும் மூங்கில்; அவற்றில் வண்டுகளால் துளைக்கப்பட்ட துளை; அதனிடையே விரைந்து வீசும் காற்று; புல்லாங்குழலின் ஒலி அங்கு தானாய் எழுகிறது. அருகில் பாடிக் குதித்தோடும் பனிநீர் அருவி எழுப்பும், 'இழும்' என்னும் ஓசை, எண்ண இனிக்கும் வண்ண மலர்கள், அதில் தேனை உண்ண நாடிப்பறக்கும் வண்டுகளின் இன்னோசை, தோகை விரித்து இனிமையாக ஆடும் மயிலின் ஆட்டம், இவற்றைக் கண்டும் கேட்டும் இன்புற்று வியக்கும் குரங்குகள். இயற்கையின் இந்த எழிற்கோலத்தில் ஈடுபட்ட சங்கப் புலவராகிய கபிலர் இதை அழகுமிக்கதொரு நாட்டிய அரங்கமாகக் கற்பனை செய்கிறார்.

**'ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்**
**கோடை யவ்வளி குழலிசை யாகப்**
**பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்**
**தோடமை முழலின் துதை குரலாகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு**
**மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக**
**இன் பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து**
**மந்தி நல்லவை மருள்வன நோக்கக்**
**கழை வளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்**
**நனவுப் புகு விறலியில் தோன்றும்'**
**(அகம்.82:1 10)**

கவிஞர் தம் கற்பனையில் குறிஞ்சி மலைச்சாரல் அழகிய ஆடுகளமாகிறது. மூங்கில் துளைக் காற்றின் இசை குழலோசை, முழங்கி இறங்கும் அருவியின் ஒலி முழவோசை, மான்களின் சத்தம் பெருவங்கிய ஓசை, வண்டுகளின் முரற்சி யாழோசை என அமைந்து இனியதொரு குழுவின் இசையாக விளங்குகிறது. மயில் விறலபட ஆடும் விறலியாகவும் மந்திகள் பார்வையாளர்களாகவும் அமைந்துவிடுகின்றன. இக்காட்சியில் ஈடுபடுபவர்கள் நாட்டிய அரங்கம் முழுவதையும் தங்கள் அகக்கண்ணால் காண்பதோடு, அரங்கில் உள்ளோரில் ஒருவராய் அமர்ந்து நாட்டிய இன்பம் துய்க்கும் உணர்வையும் பெறுகின்றனர். சங்ககாலத் தமிழ்மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினர். காடு, மலை,கடல், வயல் ஆகிய நானில இயற்கை, இளமையில் அவர்களின் தாய்மடியாகவும் வளர்ச்சியில் பள்ளியாகவும் திகழ்ந்தது. திங்களும் தென்றலும் புல்லும் பூக்களும் மரமும் பறவையும் விலங்கும் அவர்களுக்கு அறிவூட்டும் ஆசிரியர்களாகவும் ஆன்ம நலம் காட்டும் குருவாகவும் அமைந்தன. இயற்கையின் மௌன மொழிகளை உணரும் உள்ளம் படைத்திருந்தனர் சங்ககால மக்கள். அவற்றின் அழகைக் கண்டு உணர்ந்து துய்க்கும் திறன் பெற்றிருந்தனர். சங்ககாலப் புலவர்கள், இயற்கையின் புறத்தோற்ற அழகில் மட்டுமே ஈடுபட்டுப் பாடவில்லை. மக்கள் தம் வாழ்வு நெறிக்கமைந்த நல்லதொரு பின்புலமாகவே அப்பாடல்களில் இயற்கை அமைந்துள்ளமையைக் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறது செயற்கை கருவிழி



பார்வையற்றோருக்கு புது நம்பிக் கையூட்டும் வகையில், புதிய செயற்கை கார்னியா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதைப் பொருத்துவதன் மூலம்இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

சுவீடன், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு இந்த புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளது. கண் பார்வைக்கு மிக முக்கியமானது கார் னியா எனப்படும் கருவிழி. அது பாதிக்கப் பட்டால் பார்வை பறிபோகும்.

இந்த நிலையில் இந்த கார்னியாவை செயற்கையாக உருவாக்கி மூன்று நாட்டு விஞ்ஞானிகள் குழு சாதனை படைத்து, பார்வையற்றோருக்கு புதிய வெளிச்சத் தைக் கொடுத்தது.

இது குறித்து ஆய்வுக்குழுவில் இடம் பெற்றவர்களில் ஒருவரான ஒட்டாவா மருத்துவமனை ஆய்வுக் கழக டாக்டர் கிரிபித் கூறுகையில்;

செயற்கை கல்லோஜனைப் பயன்ப டுத்தி இந்த செயற்கை கார்னியாவை உருவாக்கியுள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த செயற்கை கார்னி யாவை பாதிக்கப்பட்ட நோயாளிகளுக் குப் பொருத்தி ஆய்வு செய்தோம். அதில் ஆய்வுக்குட்பட்டோருக்கு நல்ல முன் னேற்றம் காணப்படுகிறது.

இந்த செயற்கை கார்னியாவைக் கண் ணில் பொருத்துவதன் மூலம் பாதிப்புக் குள்ளான பகுதியில் செல்களின் வளர்ச்சி தூண்டப்பட்டு பார்வை திரும்ப வாய்ப்பு ஏற்படுகிறது. கிட்டத்தட்ட கான்டாக்ட் லென்ஸ் போல இந்த செயற்கை கார் னியா பொருத்தப்படுகிறது என்றார்.

# குறுக்கெழுத்துப்போட்டி - 49

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | 7 | ■ | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | ■ | 15 |
| 16 | ■ | 17 | ■ | 18 | ■ |
| 19 | ■ | 20 | 21 | 22 | 23 |
| ■ | 24 | 25 | ■ | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ள நாடு

6. பசுக்களுக்கு பால் சுரக்கும் இடம் (திரும்பியுள்ளது)

8. கற்பூரம்

11. முதல்வர் என்றும் சொல்லலாம்

20. அனைவருக்கும் உண்டு (குழம்பியுள்ளது)

24. செல்போனுக்கு போடுவது

26. மருத்துவ மாது என்றும் சொல்வர்

**மேலிருந்து கீழ்**

1. மனித மாமிசம் சாப்பிட்ட சர்வாதிகாரி

2. வானரம் (குழம்பியுள்ளது)

4. பிரபல நடிகர் (குழம்பியுள்ளது)

5. மருத்துவ குணமுள்ள மரம்

13. விஜயம் என்றும் சொல்லலாம்

18. மனைவி (தலைகீழ்)

23. சந்திரன் என்றும் சொல்வர்

## குறுக்கெழுத்துப்போட்டி - 47 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கனடா | 1. கனவு |
| 6. கர்ணன் | 3. தடாகம் |
| 10. தரவு | 4. பணம் |
| 14. கனம் | 11. கரகம் |
| 18. கனி | 16. வனம் |
| 20. நாமம் | 17. நாகம் |
| 23. ஆர்வம் | 18. ஆனி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திருமதி லோகா ஸ்ரீ சக்திவேல்,**
**45, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்.**

## பாராட்டுப் பெறுவோர்

01. எம்.எஸ்.சித்தி உம்மா,
பள்ளிவாசல் தோட்டம்,
பெரியகடை, திருகோணமலை.

02. டி.ஆர்.டிலுக்ஷி,
64, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.

03. கே.அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

04. க.கமால்தீன்,
புன்னக்குடா வீதி,
ஏறாவூர் - 03.

05. சேகர் ஜெசிந்தன்,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15**
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................




## கண்டுபிடிப்புகள்

புகையிரதம்- ஜோர்ஜ் ஸ்ரிவன்சன்
தொலைப்பன்னி-கிறகம் பெல்
ஆகாய விமானம் -றயிட் சகோதரர்கள்
நூல் நூற்கும் ஜெனி-ஜேம்ஸ் ஹொக் றிவ்ஸ்
நெசவு நாடா- ஜோன் கே
பாதுகாப்பான விளக்கு- ஹம்பிறிடேல்
நீர்ச்சட்டம்-றிச்சட் ஆக்றயிட்
நீராவியால் இயங்கும் இயந்திரம்-ஜேம்ஸ் வோட்
மோட்டார் வாகனம்-டெம்ளர்
வானொலி-மார்க்கோனி
மின்சாரம்-மைக்கல் பரடே
துவிச்சக்கரவண்டி-மக்மிலன்
தையல் இயந்திரம்-எலியஸ்கோ
தொலை நோக்கு-கலிலியோ கலிலி
ரெலஸ் கோப்-எலனெக்

**ரிஷி,ஜஷி, மட்டுவில்.**

## தெரிந்துகொள்ளுங்கள்

1. உலகிலேயே உயரமான சிகரம் எவரெஸ்ட். இதன் உயரம் 8,848 மீற்றர்கள்.
2. திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
3. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மொஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
4. உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.
5. அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராஜ்ஜியம்.
6. உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.
7. இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு சான்மரீனோ.
8. உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு சுவீற்ஸர்லாந்து.
9. முதல் டிரக்டர் 1900 ஹால்ட் என்பவரால் செய்யப்பட்டது.
10. முதன் முதலில் காகிதத்தினால் ரூபா நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.
11. ஐக்கிய நாடுகள் சபை 1945, அக்டோபர் 24 இல் தொடங்கப்பட்டது.
12. உலகிலேயே வெப்பமான இடம் அசீசியா [லிபியா].
13. உலகிலேயே குளிர்ந்த இடம் சைபீரியா [ரஷ்யா].
14. விமானம் பறக்கும் உயரத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் ஆல்டி மீற்றர்.
15. உலகிலேயே அதிக வயதில் பிரதமர் ஆனவர். மொகராஜி தேசாய். இவர் 1977 இல் மார்ச் 24 இல் பதவி ஏற்றபோது வயது 81.
16. பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.
17. ஒட்டகம் 1 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள தண்ணீரை எளிதாகக் கண்டுபிடித்துவிடும்.
18. கரையான் ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டை இடும்.
19. நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
20. மனிதனுடைய காதுகளால் 130 டெசிபல் அளவுதான் பொறுத்துக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடம்பரங்கள் ஒருபுறம் அவலங்கள் மறுபுறம்

நாட்டில் யுத்தம் முடிவுற்று ஒரு வருடம் உருண்டோடிவிட்ட நிலையில், வன்னி மக்களின் வாழ்வில் பாரியளவில் மாற்றங்கள் எதுவுமே நிகழ்ந்து விடவில்லை. உட-உள ரீதியில் தாக்கப்பட்டிருக்கும் இம்மக்களிடம் அவர்கள் உயிரைத்தவிர ஏதுமே மிஞ்சவில்லை!

நெல்விளைந்த வன்னிமண் ஷெல்லில் நனைந்து, இனி மேல் இழப்பதற்கு என்னிடம் எதுவுமேயில்லை என்பதுபோல் காட்சியளிக்கின்றது. வந்தாரையெல்லாம் வரவேற்று விருந்தோம்பல் மேற்கொண்ட வன்னி மக்களோ- ஒருவேளை உணவுக்கே பிறரிடம் யாசகம் கேட்கும் நிலையில் வாழ்கின்றனர்.

சாதாரண காற்றுக்கே தாக்குப்பிடிக்க முடியாதளவிற் காணப்படும் தறப்பாள் கூடாரங்களில் உள வெறுமையையும் உடல் வறுமையையும் சுமந்த வண்ணம், 'எங்கள் வாழ்வில் ஒளியேற்ற யார் வருவார்கள்' எனும் எதிர்பார்ப்புடன் இம்மக்கள் காலத்தை ஓட்டுகின்றனர்.

துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்துப் பிள்ளைகள் துவண்டு போயும், இலட்சியம் சுமந்த இளைஞர்கள் ஓடிந்து போயும், அனுபவம் பொக்கிஷமாய் மிளிர்ந்த முதியோர் வரண்டு போயும் வாழ்கின்றனர். மழை விட்டும் தூவானம் நிற்காத நிலைபோன்று போர் ஓய்ந்தும் அதன் நினைவுகளிலிருந்து மீள முடியாதுள்ளனர்.

வன்னி வாழ் உறவுகள் இவ்வாறு வாடிக் கொண்டிருக்க, 'யாழ்ப்பாணம்' தன் 'சுயநலப் போக்கில்' தான் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மடிநிறையப் பொருள் இருந்தும், மிடிசுமக்கும் மக்களுக்கு உதவ அது தயாராயில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இங்கு எழுகின்றன. வாடிய பயிர்களாய் பசித்த உறவுகள் அங்கு அழுகின்றன. கொண்டாட்டங்கள், கேளிக்கைகள் என்பன தினமும் வளர்கின்றன! புலம்பெயர் உறவுகள் வருகையில் இல்லங்கள் பூரிப்பில் மிளிர்கின்றன!

“சொந்தச் சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை கலங்காரடி- கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி!''


என்ற பாரதி பாடல் இவர்களுக்கே பொருந்தும்!

இங்குள்ள மக்கள்தான் இப்படியென்றால் ஆலயங்களின் நிலை சொல்லவும் வேண்டுமா? சமூகத்தில் அவை எதற்காக எழுப்பப்படுகின்ற எனும் நோக்கம் மறந்து செயற்படுகின்றன.

இருந்த ஆலயங்களை இடித்துப் பிரம்மாண்டமாய்க் கட்டுவது, நாலா திக்குகளும் வானளாவிய கோபுரங்கள் எழுப்புவது; மாபிள் தரைகளை உண்டு பண்ணுவது, வர்ணக்கலவைகளாய் குளிப்பாட்டுவது, தரணியையே சொற்கமயமாய் உருவாக்குவது என ஆலயங்கள் ஒருபுறம் விளங்க, அதன் கண்ணுறையும் 'தெய்வங்கள்' நிலையை வர்ணிக்க வார்த்தையில்லை.

வேளைக்கொரு ஆடையுடுத்தி – மேனிகொள்ளா அணிசுமந்து 'சுவாமி திருவீதியுலா' வரும்காட்சி அற்புதம் நாளைக்கு உணவுக்கு என்ன செய்வது? என வாழும் வன்னி உறவுகளின் வாழ்வு விசித்திரம்!





இப்படிப்பட்ட ஆலயங்களில் உண்மையில் இறைவன் இருப்பானா? அவன் விரும்பி உறைகின்ற இடம் ஏழை நெஞ்சங்கள் என்றது பொய்யா? அறச்சாலைகளாக விளங்க வேண்டிய ஆலயங்கள் அலங்காரப் பந்தல்களாய் மாறுவது தகுமா? நொந்து போயுள்ள வன்னி உறவுகளுக்கும் யாழ்ப்பாணக் கடவுளர்க்கும் சொந்தம் இல்லையா? கேள்விக்குறியாய் வாழும் வன்னி உறவுகளுக்கு வியப்புக்குறிகளை அளிக்க ஆலயங்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை 'அன்னதானம்' என்ற பெயரில் அறுசுவை வண்டிகள் ஆலயங்களில் வழங்கப்படுகின்றன. இதில் பசியாறிச் செல்வது 'உள்ளோர்'தானே? இந்நிதியை வன்னி உறவுகளுக்கு அளித்தால் ஆகாதோ? தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை எரித்திடுவோம்' என்றான் பாரதி.

ஆனால், நம்முறவில் தனியொரு தொகு உணவின்றி வாடுவது யாழ்.உறவுகளுக்குத் தெரியாதா? தமது வருமானத்தில் பத்தில் ஒரு வீதம் அவர்களுக்காக அளித்திட ஏன் இவர்கள் முன்வரக் கூடாது?

இந்து ஆலயங்கள் ஒருபுறம் பிரம்மாண்டமாக எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் அதேநேரம், யுத்த வெற்றிகளைப் பறைசாற்றும் முகமாகச் சந்துகள் தோறும் புத்தர் சிலைகள் சிரிக்கின்றன. மனிதநேயம் செத்துக் கொண்டிருக்க, வெறும் கற்கோவில் அமைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்?

வன்னி மக்களின் அவலங்களையும் யாழ்.வாழ் உறவுகளின் ஆடம்பரங்களையும் காண்கின்ற பொழுது, உண்மையில் மனித நேயமே மரணித்து விட்டதா என்றே எண்ணத் தோன்றுகின்றது! ஆலயங்களும் இதில் விலக்கல்ல!

இது தொடர்பாக யுவதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; 'ஆலயங்கள் இருக்கத்தான் வேண்டும். ஆனால், அவை மக்கள் சேவை செய்ய வேண்டும். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று விவேகானந்தர் சொன்னதற்கேற்ப ஆலயங்கள் செயற்படல் வேண்டும். இதில் வன்னி மக்களின் நலனை அதிகம் நோக்க வேண்டும்' என்றார்.

மற்றோர் நபர் கூறுகையில்; 'வன்னி மக்கள் இன்று குண்டுச்சத்தம் இல்லாத யுத்தத்தைத் தரிசித்துக் கொண்டிருக்கின்றனர். அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு உள்ளங்களுமே போர்க்களமாகக் காட்சியளிக்கின்றன. வசதி உள்ளவர்கள் அவர்கள் வாழ்வை வளமாக்க முன்வர வேண்டும். குறிப்பாகப் புலம்பெயர் உறவுகள் முன்வர வேண்டும்' என்றார்.

'ஏழைகள் எங்குளரோ என்னிதயம் அங்குளதே' எனும் ஆண்டவன் குரல் ஆலய நிர்வாகிகள் காதில் ஓங்கி ஒலிக்கட்டும்' 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை!' எனும் பழமொழி யாழ். உறவுகளுக்குத் தெரியட்டும்! வன்னி மக்களைத் தெய்வமாய் எண்ணியாவரும் உதவ முன்வருவது காலத்தின் கட்டாயம்!

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரமுகி 2இல் அஜீத்



அஜித்தும் ரஜினியும் 'இப்படி' (இதை வாசிக்கும்போது இரண்டு கை விரல்களையும் இறுக்க கோர்த்துக் கொள்ளவும்) என்பது திரையுலகத்திற்கு மட்டுமல்ல, சாதாரண ரசிகர்களுக்கு கூட தெரியும். ரஜினி சொன்னால் அஜீத் கேட்பார். அது எதுவாக இருந்தாலும்! அந்தளவுக்கு அவரை நம்பும் தல. சூப்பர் ஸ்டாரின் அட்வைஸ் கேட்டு ஒரு புதிய படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். கன்னடத்தில் வெளிவந்து பெரும் வசூலை அள்ளிய படம் ஆப்தமித்ரா பார்ட்2. இது சந்திரமுகி படத்தின் இரண்டாம் பாகம். இந்த படத்தை தமிழில் எடுக்க வேண்டும். அதிலும் ரஜினியே நடிக்க வேண்டும் என்பது பி.வாசுவின் விருப்பம். இதற்காக ரஜினியிடம் அவர் பேசிக்கொண்டேயிருக்கிறார் பல மாதங்களாக. சென்னையில் ஒரு 'ப்ரிவியூ' ஏற்பாடு செய்து அதை ரஜினியையும் பார்க்க வைத்தார். படத்தை பார்த்த ரஜினி பி.வாசுவை கட்டி தழுவி பாராட்டிவிட்டு காரேறி போய் விட்டார். இந்த நிலையில்தான் அஜித்தை அழைத்து இதில் நீங்க நடிச்சா பெரிய வெற்றியடையும். உங்களுக்கும் நல்ல பேர் கிடைக்கும் என்றாராம். மங்காத்தா படத்திற்கு பிறகு பில்லா-2இல் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட அஜித், சந்திரமுகி-2 இல் நடிக்கப் போகிறார் என்பதுதான் கோடம்பாக்கத்தில் சூறாவளியாக சுற்றிவரும் செய்தி.

Saturday சினிமா

## ஸ்ருதிக்கு காயம்



7 ஆம் அறிவு படத்தை மிகவும் நம்பியிருக்கிறார் ஸ்ருதி ஹாசன். முதல் படம் லக் சரியாகப் போகாதது ஒரு காரணம். இரண்டாவது அவரது தந்தை மொழியில் அவர் நடிக்கும் முதல் படம் இது. தவிர 7 ஆம் அறிவை இந்தியிலும் வெளியிடுகிறார்கள். லக் கொடுத்த அன் லக்கி பேரை 7 ஆம் அறிவு அகற்றும் என்பதும் ஸ்ருதியின் நம்பிக்கைக்கு இன்னொரு காரணம். சர்க்கஸ் பின்புலத்தில் 7 ஆம் அறிவு தயாராகி வருகிறது. இதற்காக ஸ்பெஷல் சண்டைக்கலையையும், மேஜிக்கையும் கற்றிருக்கிறார் சூர்யா. நாயகி ஸ்ருதிக்கும் சண்டைக் காட்சிகள் இருக்கின்றன. இதில் நடித்த போது அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. சின்ன காயம்தான். அதனை பொருட்படுத்தாமல் நடித்தேன் என தனது டுவிட்டரில் ஸ்ருதி எழுதியுள்ளார். முருகதாஸின் இந்தப் படத்துக்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

## சொக்க வைக்கும் சோனா



சொக்க வைக்கிறாரோ இல்லையோ. சோனாவின் தயாரிப்பாளர் அவதாரம் கண்டு நிஜமாகவே சொக்கிப் போகிறது சினிமா வட்டாரம். இவரது தயாரிப்பில் மளமள வென வளர்ந்து நிற்கும் கனிமொழி படத்தை விரைவில் வெளியிடப் போகிறார் சோனா. நினைத்த விலை கிடைக்க வில்லை என்றால் சொந்தமாக வெளியீடு செய்யவும் தயங்கக் கூடாது என்று நினைத்தாராம். விளைவு? தமிழகம் முழுவதும் சோனாவின் சொந்த வெளியீடு என்ற பெருமையோடு வரப்போகிறது கனிமொழி. இது ஒருபுறம் இருக்க இப்படத்தில் நாயகனாக நடித்திருக்கும் ஜெய் தானே முன் வந்து மூன்று ஏரியாக்களை வாங்கியிருக்கிறாராம். சுப்ரமணியபுரம் படத்திற்கு பின் பெரிய ஹிட் எதுவும் இல்லாமல் தவித்த ஜெய்யுக்கு இந்த படம் கொடுத்த நம்பிக்கைதான் இப்படி ஒரு துணிச்சலான முடிவெடுக்க வைத்திருக்கிறது. அது போகட்டும் சோனாவின் கருணை பார்வையால் மீண்டும் வளர ஆரம்பித்திருக்கிறது பிரேம்ஜி நாயகனாக நடிக்கும் பாக்யராஜ் 2010 இடையில் சில மாதங்கள் இந்த படப்பிடிப்பை கிடப்பில் போட்டிருந்தார்

## சரத்தின் சேது சமுத்திரம்




சரத்குமார் நடிக்கும் ஒரு புதிய படத்துக்கு, 'சேது சமுத்திரம்' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இந்த படத்தில், 'சேதுபதி' என்ற வித்தியாசமான கதாபாத்திரம் ஏற்றுள்ளார் சரத்குமார். அவருக்கு ஜோடியாக நடிக்கும் கதாநாயகி முடிவாகவில்லை. சமுத்திரக்கனி என்ற கதாபாத்திரத்தில் ராதாரவி நடிக்கிறார். வரதராஜன் என்ற முக்கிய கதாபாத்திரத்தில். பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். இவர்களுடன் ராதாரவியின் மகன் ஹரி ராதாரவி, கஞ்சா கருப்பு, ரமேஷ் கண்ணா, குயிலி ஆகியோரும் நடிக்கிறார்கள். முக்கிய வேடம் ஒன்றில் ஐஸ்ஹவுஸ் தியாகு நடிக்கிறார். நிலப்பரப்பை ஆளும் சேது பதியும், கடற்பரப்பை ஆளும் சமுத்திரக்கனியும் இணைபிரியாத நண்பர்கள். கடற்பரப்பை போன்ற விசாலமான சேது சமுத்திரத்தின் நட்பில், விஷம் கலக்கப்படுகிறது. அதில் இருந்து எப்படி மீண்டும் புனிதமான நட்பை நிரூபிக்கிறார்கள்? என்பதே படத்தின் கதை.

முன்பெல்லாம் வருடத்துக்கு 100 படங்கள் தயாராகி வெளிவந்தால், அது ஒரு சாதனையாக கருதப்பட்டது. இந்த வருடம் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை வெளியான படங்களின் எண்ணிக்கை 100 ஐத் தாண்டிவிட்டது.

இந்த 100 படங்களில் தயாரிப்பாளர்களுக்கு லாபம் சம்பாதித்து கொடுத்த படங்கள், பத்தே பத்துதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப்ரியாமணி

# விஜயின் ராஸ்கல்



நவம்பர் முதல் வாரத்தில் படப்பிடிப்பு போகலாம் என்று தீர்மானித்திருக்கிறார்களாம் த்ரி இடியட்ஸ் படத்தின் ரீமேக்கான தமிழ் படத்திற்கு. இதில் விஜய், தமன்னா ஜோடியாக நடிக்கிறார்கள் என்பதும், ஷங்கர் இயக்குகிறார் என்பதும் பரவலாக அறியப்பட்ட செய்திதான். அறியப்படாத ஒரு விஷயம்தான் இப்போது நாம் சொல்லப் போவது.இப்படத்திற்கு 'ராஸ்கல்' என்று பெயர் வைத்திருக்கிறாராம் ஷங்கர். இதற்கிடையில் விஜய் ரசிகர்கள் சந்தோஷப்படுகிற அளவுக்கு தனது பட வெளியீடுகளை திட்டமிட்டிருக்கிறார் அவர்.வருகிற தீபாவளிக்கு காவலன் திரைக்கு வருகிறான். வேலாயுதம் பொங்கலுக்கு ரசிகர்களின் சம்மர் விருந்துதான் இந்த ராஸ்கல். இதற்கிடையில் சீமானின் பகலவன் படத்திலும் நடிக்க முழு வேகத்துடன் இருக்கிறார் விஜய். இப்படத்தின் திரைக்கதை, வசனத்தை சிறைக்குள்ளேயே எழுதி முடித்துவிட்டார். இதை சில தினங்களுக்கு முன்பு நடந்த தியாகி முத்துகுமார் பற்றிய ஆவணப் பட விழாவில் உறுதிப்படுத்தியிருந்தார் பாடலாசிரியர் அறிவுமதி.

# அரை நிர்வாண அனுஷ்கா



துணிந்தவனுக்கு துக்கமில்லை என்ற பாணியில்தான் இருக்கிறது அனுஷ்காவின் அடுத்தடுத்த நகர்வுகள். ஆனால், அவரது துணிச்சலால் தூக்கம் கெடப்போவது பாவம் ரசிகர்கள்தான். அனுஷ்காவுக்கு வாழ்வளித்த படம் அருந்ததி. பதினாறு கெஜ புடவையில் அவர் நடித்திருந்தாலும் படம் பெருவெற்றி. அதன் பிறகுதான் சூர்யா, விஜய் என்று முன்னணி நடிகர்கள் அனுஷ்காவுடன் நடிக்க முன்வந்தனர். இந்தப் படங்களில் அவரது உடை எப்படி கடுகளவு சிறுத்தது என அனைவரும் அறிவர். அவற்றையெல்லாம் தூக்கி சாப்பிடுகிற மாதிரி ஒரு படம் வரவிருக்கிறது. தமிழில் அல்ல தெலுங்கில். மகேஷ்பாபுவை வைத்து அத்தடு என்ற சூப்பர் ஹிட் படத்தை கொடுத்த விக்ரம் மீண்டும் மகேஷ்பாபுவை இயக்குகிறார். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடி அனுஷ்கா. சில காட்சிகளும் ஒரு பாடல் காட்சியும் மட்டுமே பாக்கி. இந்தப் பாடல் காட்சியில் திறந்த முதுகுடன் ஏறக்குறைய அரை நிர்வாணமாக நடிக்கிறார் அனுஷ்கா. இன்னும்சில நாட்களில் ராமோஜிராவ் ஃபிலிம் சிட்டியில் இந்தப் பாடலை எடுக்கவிருக்கிறார்கள்.


# எதிர்வரும் 24இல் எந்திரன்



நின்னா வன் வே, நடந்தா ரன் வே என்ற மாதிரி சூப்பர் ஸ்டார் ரஜினி படத்தின் பிசினஸ் தமிழ் சினிமாவை மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்திய சினிமாவையே கதிகலங்க வைத்திருக்கிறது. எந்திரன் பிசினஸ் கிட்டத்தட்ட 250 கோடியை தாண்டும் என்கிறார்கள் பெயர் சொல்ல விரும்பாத திரையுலக வி.வி.ஐ.பி.கள். முதல் விற்பனையாக மதுரை ஏரியாவை விலைக்கு வாங்கியிருக்கிறார் பிரபல விநியோகஸ்தரான மதுரை அன்புவின் சகோதரர் அழகர். விலை சுமார் 13 கோடி. தமிழகமெங்கும் பெரிய நகரங்களில் ஒரு தியேட்டரில் வெளியிட ஒரு கோடி ரூபா என்றும், சிறிய ஏரியாக்களில் ஒரு தியேட்டருக்கு 40 இலட்சம் என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம். எப்போது ரிலீஸ் என்பது இதுவரைக்கும் உறுதியாக தெரிவிக்கப்படவில்லை என்றாலும், தியேட்டர் மற்றும் விநியோகஸ்தர் வட்டாரங்களுக்கு சொல்லப்பட்டிருக்கும் திகதி செப்டம்பர் 24. மலையாளம், கன்னடம் ஆகிய இரு ஏரியாக்களிலும் நேரடியாக தமிழிலேயே வெளியிடுகிறார்கள். ஆனால், ஆந்திராவில் மட்டும் தெலுங்கில் டப்பிங் செய்யப்பட்டு வெளியிடப்படுகிறதாம்.

மறைந்த நடிகர் மேஜர் சுந்தர்ராஜனின் மகன் மேஜர் கௌதமும் அவருடைய மனைவி கோகிலாவும் சேர்ந்து சென்னையில், நாகரிக நடன உயர் பயிற்சியகம் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தப் பயிற்சியகத்தைச் சேர்ந்த நடன கலைஞர்கள், கடந்த ஜூலை மாதம் சிங்கப்பூரில் நடந்த ஆசிய பசுபிக் நடன போட்டியில் கலந்து கொண்டு ஆடி, கோப்பையை வென்று வந்து இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை உலகில் நடிகைகள்

கொக் விளம்பரத்தில் நடித்தபோது கூட இத்தனை தூரம் பேசப்பட்டிருப்பாரா தெரியவில்லை, இந்த கோக்கைன் விவகாரத்தில் த்ரிஷாவின் பெருமை[?]ஆந்திராவையும் தமிழ்நாட்டையும் சேர்த்துக் கலங்கடித்துக் கொண்டிருக்கிறது.

சர்ச்சைகள் ஒன்றும் அவருக்குப் புதிதல்ல. கிழக்குக் கடற்கரை சாலையின் கேளிக்கை விபத்துகளில் அவ்வப்போது த்ரிஷாவின் பெயரும் 'அடி'படும்.அவரைக் காதலிக்கிறார்.இவருடன் டேட்டிங் போனார்.சக நடிகைகளுடன் குடுமிப்பிடி என்றெல்லாம் பரபரக்கும்.இவ்வளவுக்கும் இடையில் ஒருமுறை வந்த பாத்ரூம் குளியல் படம் இன்றைக்கும் வெப்சைட்டுகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.த்ரிஷாவின் தற்போதைய பரபரப்பு கோக்கைன் பயன்படுத்துகிறவர் என்பது.

பிரபல தெலுங்கு நடிகர் ரவிதேஜாவின் சகோதரர்களுக்கு கோக்கைன் கடத்தும் நைஜீரிய இளைஞர்களுடன் தொடர்பிருப்பதாகச் சந்தேகித்த ஆந்திர பொலிஸ் அவர்களைக் கையும் போதையுமாக வளைக்கத் திட்டமிட்டிருந்தது.ஐதராபாத் மேற்குப் பிராந்தியத் துணை ஆணையரான ஸ்டீபன் ரவீந்திரா தலைமையில் காந்திருந்த பொலிஸ் சில தினங்களுக்கு முன் அவர்களைச் சுற்றி வளைத்தது.சீமா கிளமண்ட் விக்டர் என்ற அந்த நைஜீரிய இளைஞரிடம் இருந்து கோக்கைன் பொட்டலங்களை ரவிதேஜாவின் தம்பிகளான ரகுபாபு,பரத் இருவரும் பெற்றுக் கொள்ளும்போது கைது செய்யப்பட்டார்கள்.ஒவ்வொரு கிராம் பொட்டலமாகக் கட்டப்பட்ட சுமார் 48 கோக்கைன் பொட்டலங்கள் கைமாறியதாக தெரிவிக்கிறது பொலிஸ்.அவர்கள் பயன்படுத்திய கறுப்பு நிற பாந்தர் ரக படகுக் காரும் கைப்பற்றப்பட்டிருக்கிறது.இதில் எங்கிருந்து வந்தார் த்ரிஷா?

கைது செய்யப்பட்ட கிளமண்ட்டின் உயர் ரக செல்போனையும் அவர் பயன்படுத்திய லேப்டாப்பையும் ஆராய்ந்த பொலிஸாருக்கு ஆந்திரத் திரையுலகைச் சேர்ந்தவர்களுடன் இந்த போதை கும்பலுக்கு இருக்கின்ற தொடர்புகள் தெரியவந்தது.சுமார் 65 பிரபலங்களுக்கு கிளமண்ட் மற்றும் ரவிதேஜா சகோதரர்கள் போதை மருந்து விநியோகம் செய்து வந்ததும் தெரிய வந்தது.இந்தப் பட்டியலில்தான் த்ரிஷாவின் பெயரும் இருப்பதாக ஆந்திர தொலைக்காட்சிகள் டமாரம் அடித்துக் கொண்டிருக்கின்றன.இவர் மட்டுமல்ல,இந்த பட்டியலில் மேலும் பல தமிழ், தெலுங்கு நடிகர்,நடிகைகளின் பெயர்களும் இடம்பெற்றிருக்கிறதாம்.

ஏ.பி.என்.,ஆந்திரஜோதி என்ற செய்தி அலைவரிசைகள் இந்த 65 பேரில் முக்கியமான பத்து வி.ஐ.பி.களின் பெயர்களை வெளியிட அதற்கு முன்பாகத் திரண்ட அவர்களது ஆதரவாளர்கள் கோஷம் போட்டு குமுறித் தீர்த்தார்கள்.த்ரிஷாவும் உடனே தனது மறுப்பை வெளியிட்டிருக்கிறார்.இந்த விஷயத்தில் தேவையில்லாமல் என் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது.எனது மனேஜர் உயர் அதிகாரிகளிடம் பேசி வருகிறார்.யாராவது என் பெயருக்குக் குந்தகம் விளைவிக்க முயன்றால் அவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடருவேன் என்று எச்சரித்திருக்கின்றார். இந்த விவகாரத்தில் த்ரிஷாவுடன் சார்மி, காம்னா ஜெத்மலானி ஆகியோரின் பெயர்களே தற்போது வெளிவந்துள்ளன.

உண்மையில் நடப்பதென்ன?ஆந்திராவுக்கும் தமிழ்நாட்டுக்கும் நெருங்கிய தொடர்பில் இருக்கிற சில திரையுலக பிரபலங்களுடன் பேசியபோது வந்து விழுந்த தகவல்கள் ரொம்பவே அதிர்ச்சிரகம்.



பெரும்பாலான நடிகர்,நடிகைகள் எல்லோரும் இந்த போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டார்கள் என்பதுதான் நிஜம். வாதத்திற்கு வேண்டுமானால் இந்த விஷயத்தை மறுக்கலாமே தவிர உண்மை வேறு.பணக்காரர்கள் வசிக்கும் பஞ்சாராஹில்ஸ் பகுதியில் டச் என்றொரு பப் இருக்கிறது.இந்த பப்பை முன்பு நடத்தி வந்தவர் நாகர்ஜுனா.மலையடிவாரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த விடுதிதான் போதைகளின் சொர்க்கமாக இருந்தது.இங்கு உறுப்பினராக அல்லாதவர்கள் உள்ளேயே நுழைய முடியாது. கைவிரல் ரேகையை லேசர் கருவியில் பதிவு செய்தால்தான் உள்ளேயே நுழைய முடியும். இந்த பப்பின் விசேஷம் உள்ளேயே இருக்கின்ற நீர்வீழ்ச்சியும் ஏரியும் தான்.இங்குதான் கூடுவார்களாம் பிரபல தமிழ் மற்றும் தெலுங்கு நடிகர் நடிகைகளும்.இவர்களின் போக்கு ஒரு கட்டத்தில் நாகர்ஜுனாவுக்கே அச்சத்தை ஏற்படுத்த இந்த கேளிக்கை விடுதியையே கைமாற்றிவிட்டு விட்டதாக சொல்கிறார்கள்.





கிருஸ்ணா என்ற பெயரில் ரவிதேஜாவுடன் நடித்திருக்கிறார் த்ரிஷா. இந்தப் படத்தின் மிகப்பெரிய வெற்றியை அடுத்து அதன்பின் இரண்டு படங்களில் அவருடன் நடித்தார் த்ரிஷா.ரவிதேஜாவின் சகோதரர்கள் மட்டுமல்ல ரவிதேஜாவுக்கும் போதைப் பழக்கம் இருப்பதாக கிசுகிசுக்கிறார்கள் திரையுலகத்தில்.

த்ரிஷாவின் ஆடைவடிவமைப்பாளராக இருக்கும் ஒரு இளைஞரை நோக்கி கைகாட்டும் கோடம்பாக்கப் புள்ளிகள் சிலர் சென்னையின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் நட்சத்திர விடுதிக்கு இரவு எட்டு மணியளவில் வந்து பாருங்கள் தெரியும் என்கிறார்கள்.இந்த இளைஞருடன் பிரபலமான ரம்ய நடிகை வீணையின் பெயர் கொண்ட அவரது தங்கை ஆகியோரும் வ[illegible] பல வி.ஐ.பி. வீட்டுப் பெண் பிள்ளைகளும் இங்கே சங்கமம் ஆவார்களாம்.த்ரிஷாவுக்கும் இந்த இளைஞருக்கும் காதல் இருக்குமோ என்றெல்லாம் ஒரு காலகட்டத்தில் ஊடகங்கள் அலசி ஆராய்ந்திருக்கின்றன.ஆனால் அவர் என் நெருங்கிய நண்பர் மட்டுமே என்று அந்தக் கிசுகிசுவுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் த்ரிஷா. இந்த இளைஞரும் த்ரிஷாவும் கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்கிற படங்கள் த்ரிஷாவின் பேஸ்புக்கிலேயே இடம் பெற்றிருப்பதை பேஸ்புக் ரசிகர்கள் அறிவார்கள்.

இந்தப் பலமான தகவல்களைச் சொன்ன சில புள்ளிகள் மேலும் சொன்னவை அதிர்ச்சியை ஏற்படுத்தியவை.கடந்த சில மாதங்களாகவே ஐதராபாத்தில் இயங்கி வந்த சுமார் ஒன்பது பப்புகளில் நடிகர், நடிகைகளின் நடமாட்டத்தைப் பார்க்க முடியவில்லையாம்.பிறகு எங்கே போகிறார்கள்?அந்த இளம் புயல்கள் மெல்லத் திசைமாறி தமிழ்நாட்டில் மையம் கொண்டிருக்கிறார்களாம்.எங்கே தெரியுமா?திருப்பூர் பகுதியில்.இங்கே கைமாறும் போதைவஸ்து எங்கே போகிறது?

திருப்பூரைச் சுற்றியும் பொள்ளாச்சியிலிருந்து கோவை செல்லும் வழியிலும் ஏராளமான பண்ணை வீடுகள் அமைந்திருக்கின்றன.சகல வசதிகளுடன் ஒரு பப்பை போலவே அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பண்ணை வீடுகளில் தஞ்சம் புகுந்துவிடுகிறார்களாம் இவர்கள்.தமிழ்,தெலுங்கு மட்டுமல்ல பிரபல பொலிவுட் நட்சத்திரங்களும் இங்கு தஞ்சமடைகிறார்கள் என்பதுதான் வியக்க வைக்கும் 'வேஷந்தாங்கல்' செய்தி.

தமிழ்நாட்டின் பாங்கொக் என்று அஞ்சத்தக்க வகையில் மெல்ல மெல்ல உருமாறி வருகிறதாம் திருப்பூர்.சமீபகாலமாக இங்கு வரும் உகாண்டா, நைஜீரிய இளைஞர்கள் பனியன் ஏற்றுமதிக்குத்தான் வருகிறார்களா என்பதை ஆராய வேண்டிய அவசியம் இருக்கிறது என்றும் கிசுகிசுக்கிறார்கள் கோடம்பாக்கத்தில்.ஏனென்றால் இவர்களிடம் இருந்து பெறப்படும் போதைப் பொருட்கள்தான் மேற்படிப் பண்ணை வீடுகளில் பயன்படுத்தப்படுகிறதாம்.எப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள் என்ற கேள்விக்கு அவர்களிடமிருந்து வரும் பதில் இன்னும் ஒரு அதிர்ச்சியான செய்தியைக் கசிய விட்டது.

திருப்பூரில் இருக்கும் பிரபல தொழிலதிபர் ஒருவருக்கும் தமிழ்ப்படக் கதாநாயகி ஒருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மெல்ல மெல்ல அவருக்குப் போதைப் பழக்கத்தை ஏற்படுத்தினாராம் நடிகை. அதற்கு அவருக்கு எளிதாக உதவியது இந்த நைஜீரிய இளைஞர்கள்தானாம். ஒரு கட்டத்தில் தொழிலதிபரிடம் இருந்து பெறப்பட்ட இரண்டு வெற்று காசோலைகளில் ஒன்றில் ஒரு கோடி வரை பணம் எடுத்ததாகவும் அதற்குள் சுதாகரித்துக் கொண்ட தொழிலதிபரின் குடும்பம் மற்றொரு செக்கை இடைநிறுத்தியதாகவும் கூறுகிறார்கள் இவர்கள்.

வம்புக்குப் பெயர் போன ஒரு நடிகரும் இரண்டெழுத்து பெரிய இயக்குநரின் படத்தில் நடிக்கும் இரு நாயகர்களில் ஒருவரும் சமீபத்தில் மறுமணம் செய்துகொண்ட குணச்சித்திர நடிகரும் கூட மேற்படி நடிகை தந்த போதைப் பழக்கத்தில் விழப்பார்த்து சுதாகரித்துக் கொண்டவர்கள்தான் என்று சந்தோஷம் கொள்கிறார்கள் கோடம்பாக்கத்தில்.

இதேவேளை ஹைதராபாத் அரசியல் நெருக்கடிகளுக்குப் பணிவதற்கு முன் தங்களுக்குத் தெரிந்த எல்லா உண்மையையும் ஊடகங்கள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டிவிடுவது என்பதில் மகா உறுதியாய் நிற்கிறது ஹைதராபாத் பொலிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# நிருபமா ராவ்

இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்திய உயர்மட்ட இராஜதந்திரிதான் நிருபமா ராவ்.

இலங்கையில் மோதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்து ஒருவருடம் கழிந்துள்ள நிலையில் அரசு நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே தனது காய் நகர்த்தலைத் தொடர்கின்றது.

அந்த அடிப்படையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் இலங்கை விஜயமும் இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரிகளின் வெளிநாட்டு விஜயங்களும் சமநிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மோதல்கள் நடைபெற்ற காலப்பகுதியிலும் சரி அதற்குப் பின்னரும் சரி போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிகளவான உதவிகளை வழங்கிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இவ்வாறான நிலையில் இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

சிவ்சங்கர் மேனனைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகாரச் செயலராகப் பதவியேற்ற பின்னர் நிருபமா ராவ் இலங்கைக்கு மேற்கொண்டுள்ள இரண்டாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

ஆனாலும் நிருபமா ராவ் இலங்கைக்குப் புதியவர் அல்ல. இலங்கை மக்களுக்கு ஏற்கனவே பரிச்சயமானவர்தான் நிருபமா.

காரணம், முன்னர் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நிருபமா ராவ் பதவி வகித்துள்ளார். இந்நிலையில் இலங்கை மக்கள் நிருபமா ராவை எவ்வாறு மறந்து விட முடியும்.

இந்தியாவின் கேரளா மலப்புரத்தில் 1950 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி பிறந்தவர்தான் நிருபமா ராவ்.

நிருபமா ராவின் தந்தை இந்திய இராணுவத்தில் உயர்மட்டத்தில் கடமையாற்றியுள்ளார் என்ற வகையில் நிருபமா ராவ் குடும்பம் இராணுவப் பின்னணியைக் கொண்டது என்று கூறிக் கொள்ள முடியும்.

இந்தியாவின் பல பகுதிகளில் நிருபமா தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்திருந்தார். குறிப்பாக பெங்களூர், புனே, லக்னோ மற்றும் தமிழ்நாட்டின் கூடனூர் ஆகிய பகுதிகளில் பாடசாலைக் கல்வியை நிருபமா தொடர்ந்திருந்தார்.

அத்துடன் 1970 இல் பெங்களூர் மௌண்ட் காமல் கல்லூரியில் பி.ஏ. (B.A.) பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்தார்.

அத்துடன் மகாராஷ்டிராவிலுள்ள மரத்வடா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் முதுமாணிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார்.

பின்னர் 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய சிவில் நிர்வாக சேவைப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததன் மூலம் இந்திய வெளிவிவகார சேவையில் இணைந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் வெளிநாட்டு சேவைகள் குறித்த பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர் ஆஸ்திரியாவுக்கான இந்திய தூதுவராலயத்தில் பணியாற்றினார்.

பின்னர் 1981 முதல் 1983 வரையான காலப் பகுதியில் இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் முதலாவது செயலராகப் பணியாற்றினார்.

பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சில் சீனாவுடனான இந்திய உறவில் தேர்ச்சி பெற்ற நிருபமா, 1988 இல் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான குழுவில் அங்கம் வகித்தார்.

அத்துடன் ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரங்களுக்கான நிலையத்தில் ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு குறித்து விசேட கற்கை நெறியைப் பயின்றிருந்தார். [1992-93]

பின்னர் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களில் கடமையாற்றி 1995-1998 காலப்பகுதியில் பெருவிற்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றினார்.

அத்துடன் பொலிவியாவுக்கான தூதுவராகவும் சமகாலத்தில் பதவி வகித்தார்.

பின்னர் வெளிவிவகார அமைச்சின் முதலாவது பெண் பேச்சாளராக 2001-2004 காலப்பகுதியில் பணியாற்றி 2004 இல் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமனம் பெற்று 2006 வரை கடமையாற்றி பின்னர் சீனாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் கடந்த 2009 ஆகஸ்ட் 1 இல் வெளிவிவகாரச் செயலாளராக இந்திய உயர்மட்ட இராஜதந்திரியாக இருந்து வருகின்றார்.

இந்நிலையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிருபமா ராவ் குறிப்பாக வடக்கில் தனது விஜயத்தின் அதிகபட்ச காலத்தைக் கடத்தியுள்ளார்.

நிருபமா ராவ் அரசியல் வல்லுநர் மட்டுமல்ல சிறந்ததொரு கவிஞரும் கூட. 'ரெயின் ரைசிங்' [மழை அதிகரிக்கின்றது] என்ற ஆங்கிலக் கவிதை நூலை எழுதினார். இந்நூல் சீன, ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.


இவ்வாறாக அரசியல் திறமை ஒருபுறமும் கவித்துவம் மறுபுறமும் கொண்டிருக்கும் நிருபமா மக்கள் மனதைப் புரிந்துகொள்ளாதவராய் இருக்க முடியாது.


வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கும் நிருபமா அம்மக்கள் கூறியதையும் அவர்களின் உள்ளக் கிடக்கைகளையும் அறிந்திருப்பார்.

இவ்வாறான நிலையில் மக்களின் வேண்டுகோள்களை அல்லது உள்ளக்கிடக்கைகளை நிறைவேற்றும் வகையில் நிருபமாவின் விஜயத்தின் பெறுபேறு அமைய வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பு.


யோ.நிமல்ராஜ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா அமைக்கும் விண்வெளி நிலையம்



விண்வெளி நிலையம் ஒன்றை அமைப்பதற்குச் சீனா திட்டமிட்டு வருகிறது. அதற்கான முதலாவது பிரிவைத் தற்போது உருவாக்கியிருக்கிறது. அடுத்த ஆண்டு விண்வெளிச் சுற்றுப் பாதையில் ஏவப்படவிருக்கும் அந்தப் பிரிவின் மின்னணுச் சுற்று மற்றும் பிற அமைப்புகளைத் தற்போது ஆராய்ந்து வருகிறார்கள்.

எட்டரை தொன் எடை கொண்ட இந்த 'டியான்கோங் 1' பிரிவை விண்வெளிக்கு எடுத்துச் சென்று ஏவும் வகையில் 'லாங் மார்ச் 2 எப்' ராக்கெட்டில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. விண்வெளியில் அமையும் இந்த நிலையத்தில் 2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 'ஷென்ஸோ 8' விண்கலம் இணையும். அதைத் தொடர்ந்து 2012 ஆம் ஆண்டில் 'ஷென்ஸோ' 9,10 விண்கலங்கள் இணையும்.

விண்கலங்களை அனுப்புவது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் சீனாவின் திட்டத்தில் ஓர் அங்கமாகும். ஆனால் விண்வெளி நிலையம் எப்போது அமைத்து முடிக்கப்படும் அல்லது அங்கு எப்போது ஆட்கள் அமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டில் நிலவுக்கு ஆளில்லாத விண்கலத்தை அனுப்பி ஆராய சீனாவும் திட்டமிட்டு வருகிறது.

முதன்முதலாக கடந்த 2003 ஆம் ஆண்டில் விண்வெளிக்கு வீரர்களை சீனா அனுப்பியது. அதன்மூலம் அமெரிக்கா, ரஷ்யாவுக்குப் பிறகு விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பிய மூன்றாவது நாடு என்ற பெருமையைப் பெற்றது. ஆனால் வழக்கமான ரகசியம் காக்கும் தன்மை, இராணுவத்துடனான தொடர்பு காரணமாக மற்ற நாடுகளின் விண்வெளித் திட்டங்களுடன் இணைந்து செயற்பட சீனா தயங்குகிறது. எப்போதும் சுறுசுறுப்பாகப் பணிகள் நடைபெறும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் கூட இணைந்து செயல்பட சீனா முன்வரவில்லை.

## குகைக்கரடிகள் அழிந்துபோக மனிதன்தான் காரணமாம்

குகைக்கரடிகள் அழிந்துபோனமைக்கு மனிதன் தான் காரணம் என சமீபத்திய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. உணவுக்காக அல்லாமல் கரடிகளின் வசிப்பிடமான குகைகளை ஆதி மனிதன் அபகரித்ததை தொடர்ந்து அந்தக் கரடிகள் மறைந்து விட்டதாக ஜேர்மனியில் இருக்கின்ற மேக்ஸ் பிளான்க் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிட்டத்தட்ட 500 கிலோ எடையுடன் இருந்த இந்த குகைக் கரடிகள் 25000 ஆண்டுகளுக்கு முன்னரே மறைந்து விட்டன. இதற்கு காரணம் ஆதி மனிதன் என இப்போது ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மனிதனின் சனத்தொகை பெருகப் பெருக கரடிகள் அழியும் எண்ணிக்கையும் அதிகரித்ததாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.


கரடிகளின் இடத்தை மனிதன் அத்துமீறி ஆக்கிரமிக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து வசிக்க இடம் இல்லாமல் தவித்து போன கரடிகள் இறந்து விட்டன. ஐரோப்பாவில் உள்ள பல குகைகளில் உறையுகத்து கரடிகளின் எலும்புகள் கிடைத்துள்ளன.

மனிதன் மட்டுமன்றி காலநிலை மாற்றங்களால் கரடிகளுக்கு சரியான உணவுப் பொருட்கள் கிடைக்காமல் போனதாலும் அவை மறைந்து இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

எனினும் குகைகளில் வாழ்ந்த கரடிகளை விரட்டி விட்டு அங்கே குடியமர்ந்து கொண்ட மனிதனால் தான் கரடிகளின் மறைவு உறுதியானதாக சமீபத்திய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.



## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## பூகம்பம் ஏற்படுவது எப்படி?




கற்பாறைகளும் உலோகங்களும் இணைந்து உருகிய நெருப்புக் கோளம், படிப்படியாகக் குளிர்ச்சி அடைந்தது தான் நாம் வாழ்ந்து வருகின்ற பூமி. இதோட மேற்பரப்பில் மணற்பரப்புகளும் சமவெளிகளும் மலைகளும் கடல்களும் ஏராளமாக இருக்கின்றது. அதனால் தான் மேற்பரப்பில் உயிரினங்கள் வாழமுடியும்.

ஆனால் பூமியின் அடிப்பாகம் இன்னும் குளிர்ச்சி அடையாமல் நெருப்புக் குழம்பாகத் தான் இருக்கு. இந்த நெருப்புக் குழப்பு சில சமயம் பூமி[illegible] மேற்பரப்பு வழியாக வெளியே வருகிறது. அப்போதான் பூமி அதிர்ச்சியடைந்து கிடுகிடுன்னு ஆடும். இதைத்தான் 'பூகம்பம்' எனச் சொல்கிறோம்.

சிலசமயம் பூமிக்குள் இருக்கின்ற நெருப்புக் குழம்பு. பூமியின் கடினமான மேற்பரப்பைத் தாக்கும் போது நெருப்புக் குழம்பு வெளியேற வழி கிடைக்காது. இதனால் அந்த மேற்பரப்பு உயர்ந்து மலைகளாக மாறி விடுகிறது. பூகம்பத்தின் போது வெளிவரும் நெருப்புக் குழம்பு நாளடைவில் குளிர்ந்து மலைகளாகவும் பாறைகளாகவும் மாறும். அதில் நெருப்புக் குழம்பு வெளிவந்த துவாரம் இருக்கும்.மறுபடி அந்த இடத்தில் பூகம்பம் வந்தா அந்த துவாரம் வழியா நெருப்புக் குழம்பு கக்கப்படும். இதைத் தான் நாம் 'எரிமலை' என்று அழைக்கின்றோம்.

## சுறா போன்ற படகு



வடிவமைப்பில் 'சுறா' போன்றே உள்ள அதைப் போலவே காற்றில் சீறிப் பாயும் ஒரு படகை அமெரிக்காவின் 'இன்னஸ்பேஸ்' நிறுவனம் தயாரித்திருக்கிறது. பெரிய வெள்ளைச் சுறா போன்ற இந்தப் படகு பக்கவாட்டில் இப்படியும் அப்படியுமாக நன்றாகச் சாயும். காற்றில் 12 அடி உயரம் வரை எழும்பிப்பாயும்.

வேடிக்கையான முயற்சிகளில் அதிக ஆர்வம் காட்டும் பெரும் பணக்காரர்களுக்கு இது பிடித்தமானதாக இருக்கக்கூடும். காரணம் இதன் விலை அப்படி! ஏறக்குறைய அரைக் கோடி ரூபா.

'சீபிரீச்சர் எக்ஸ்' என்ற இந்தப் படகு தண்ணீரில் மூழ்கியும் செல்லும். பக்கவாட்டு மற்றும் மேல் துடுப்புகள், திறக்கும் தாடை, சுறாவுக்கே உரிய நீளநீளமான 'பற்கள்' எல்லாமே உண்டு.

இந்தப் படகு ஏறக்குறைய நிஜ சுறாவின் நீளத்துக்கே அமைந்துள்ளது. அதாவது, 16.5 அடி. இந்த 'சுறா படகால்' தண்ணீருக்கு மேல் மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்திலும் தண்ணீருக்குள் 40 கி.மீ. வேகத்திலும் செல்ல முடியும்.


இரண்டு இருக்கைகள் கொண்ட இப்படகின் உட்புறம் மிக நவீன வசதிகளுடன் ஆடம்பரமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# உண்மைக் காதல்

கட்டுவன் கவிபாரதி



போர் ஓய்ந்துள்ளது, போராட்டம் ஒரு போதும் ஓய்வதில்லையல்லவா! எத்தனை வருடங்களுக்கு முன் வாழ்க்கைப் பாதையில் நிதர்சனமாக சந்தித்த சுவையான நிகழ்வுகள் இன்றும் இதயத்தை பிழிந்து பிழிந்து துன்பத்தைத் தருகின்றன.

இந்தத் துன்பம் வெறும் துன்பமா?... அல்லது சுக வேதனையா? ஒவ்வொரு மனிதனிடமும் எண்ணற்ற சம்பவங்களின் சேர்க்கையில் இருக்கின்றது. அவை ஒவ்வொன்றும் ஒரு காவியமா? அல்லது இதயக் கல்லறைகளில் வைக்கப்பட்டுள்ள அழியா மம்மியா?...

ஒவ்வொருவரும் தன் வாழ்க்கைக் காலத்தில் எண்ணற்ற கதா பாத்திரங்களைச் சந்திக்கின்றான்.

அவற்றில் தன் தாய் தந்தையிடம் கண்ட உண்மை அன்பைத் தவிர வேறொரு உருவத்தில் அவன் காணும் உண்மை நேசனை அவன் உள்ளத்தினை உருக்கி அந்தச் சுவை வாழ்க்கையில் அவனுடன் கைகோர்த்துக் கொள்கின்றது.

எத்தனை காலடித்தளங்கள் அவன் வாழ்க்கையில் பதியப்பட்டாலும் ஒரு சில இவ்வாறான உள்ளத்தினைக் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கும் எண்ணங்கள் ஒருவனுடைய வாழ்க்கைக் காலங்கள் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அசைபோடும் தனிமை நேரங்களில் இவன் துணைக்கழைக்கும் நினைவுச் சாரலாக இவை பரிணமிக்கின்றன.

இவன் பெயர் இராமலிங்கம்

அவன் பிறந்த இடம் மாதகல்

வாசனை கொண்ட கலாசாரம், கலை அத்தனையும் உருப்படியாக மணக்கும் ஒரு குடும்பத்தில் பிறந்தவன்.

ஆகம வழிபாட்டிற்கென்று இவன் கோயில் சென்றதில்லை, ஐதீக வழிபாட்டை அடியொட்டி வாழ்ந்தவன்.பெற்றோர் மிகவும் கரிசனையுடன் இவனைக் கல்வி கற்க வைத்தனர்.

எத்தனை மலர்கள் மலர்ந்தாலும் கனியாகும் பாக்கியம் ஒரு சிலதிற்குத்தான் அதுபோல இவனும் மாதகல் மாணவருக்குள் கனிந்த பழம்.

பட்டப் படிப்பையும் படித்து விட்டிருந்த இவன் வாழ்க்கையில் தொழில் வாழ்க்கை சுகப்பிரசவந்தான்.

சிறையில் மாட்டிக்கொண்டால் சிங்கங்கள் கூடப் பூனைகள்தான். உழைப்பு சுரண்டப்பட்டதால் உரமின்றி வாழ்கின்ற கூட்டத்துடன் இவனும் ஒன்றித்துவாழும் ஒருவன்.

இன்று இவன் தன்னை வேறொருவனாக அடையாளப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அவனுக்கு தொழில் கிடைத்த இடம் சற்றுத் தொலைவிலுள்ள கிராமப்புறம். அந்தச் சோலைக் காட்டுக்குள் அவனுடைய இதயமும் அவனுடன் கைகோர்த்து நடக்கின்றது. மனிதன் இம்மண்ணின் எல்லா உறுப்புகளையும் நேசிக்கின்றான்.

தலை முடிக்குள் பேனினம் எதைக் கண்டு வாழ்கிறது. கூந்தலின் சுகமா? சூடும் மலர்களின் மணமா? ஆனால், சூரியனும் சந்திரனும் காற்றும் மழையும் மின்னலும் இடியும் கூட எந்த வித்தியாசமும் காட்டாத இடம்தான் இது.

அன்றுவோர் புதன்கிழமை தன் தொழில் தொடங்க நல்ல நாளாகவே கருதுகின்றான். அந்தப் பெரிய பள்ளிக்கூடத்தின் மணிக்கட்டுடன் மோதி ஒலி எழுப்புகின்றது.

ஐநூறுக்கும் அதிகமான மாணவர் தொகையினர் உள்ள பாடசாலை அது. இராமலிங்கனும் ஒதுக்குப் புறமாக நின்று அதிபரின் வருகையை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றான். அதிபர் வந்து காரியாலயத்தினுள் நுழைந்ததும் தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றான். அதிபர் பாடசாலையின் சுற்றுப் புறத்தைச் சுற்றிக் காட்டுகின்றார்.

அவன் பட்டதாரி ஆசிரியர்.

அவனுக்குரிய நேர அட்டவணையும் அன்றைய தினமே அவனது கைக்கு வந்து சேருகின்றது. அவன் மொழி வாண்மை மிக்கவன்.

அன்று ஓர் வெள்ளிக்கிழமை

அவன் தங்கியிருந்த அறைக்கு வடக்குப் பக்கமாக சிறிது சிறிதாகத் தெரிந்த கோபுரம் பிள்ளையார் கோயிலது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். மாலை 5 மணிக்கு தோய்ந்து தோய்த்த ஆடை அணிந்து கோயிலுக்குச் சென்றான்.

வேதியர்களின் வேதயிசை நடுவே தனது பிரார்த்தனையையும் முடித்துக் கொண்டவனாய் வீடு திரும்புகிறான்.

அடுத்த நாள் பாடசாலை சென்று வழமைபோல் கற்பித்தலில் கவனம் செலுத்திய அவன் பின்னர் ஆசிரியர்களுக்கான கூட்டம் அறிவிக்கப்பட்டவுடன் அங்கே செல்கிறான்.

ஆசிரியர் கூட்டம் ஆரம்பிக்கிறது. கலை விழாவிற்கு நல்ல நிகழ்ச்சிகள் தயாராக்கப்பட வேண்டும் என்பது அதிபர் செய்தி.

அதிபர் எமது தமிழாசிரியை ஷாலினி' கவிதை எழுதுவார் 'உங்களுக்கு முடியுமானால் வாழ்த்துப்பா ஒன்று எழுதுங்களேன்' உத்தரவுக் குரலில் வேண்டுகிறார்.

இராமலிங்கம் ஒத்துக்கொள்கிறான். நிகழ்ச்சி நிரல் தயாராகி கூட்டம் வெளியே வரும் போது 'ஹலோ! நீங்கள் தமிழன்னைக்குத் தலைமகனா? இல்லை இளைய மகனா' என்று நயம்படக் கேட்டாள் ஷாலினி பதிலுக்காய், புன்னகைத்தான்.

அன்றைய இரவு உறங்க மறுத்த விழிகள் அவனுக்கு...

அடுத்த நாள் அதிகாலை கோயிலுக்குச் சென்ற அவன் அங்கே ஆசிரியர் ஷாலினி நிற்பதைக் கண்டான். ஆனால், கண்டும் காணாததுமாய் கும்பிட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் இருவரும் சந்தித்து விட்டனர். 'என்ன சேர் கோயில் பக்கம்' என்று கேட்ட ஷாலினுக்கு 'கோயில் கும்பிடுவமெண்டுதான் ஷாலி' என்று செல்லமாய்க் கூறிய பதில் அவளுடைய காதல் இதயத்திற்கு பால் வார்த்தது போலிருந்தது.

'எந்த வழியால் போகிறீர்கள் டீச்சர்' என்று கேட்க, 'முன்பு போல ஷாலி என்றே கூப்பிடலாம்' என்று கூறினாள் ஷாலினி. அதோடு, 'உங்களுடைய வழியிலும் கொஞ்சத்தூரம் வரத்தான் பார்க்கிறேன்' என்று கிண்டலாய் சொன்னாள்.

மனித இதயம் தன் மேல்தான் ஆசை வைக்காமல் விட்டது.

இருவருக்குள்ளும் காதல் பூ மலர்ந்தது. காலத்தின் வெறித்தனமான ஓட்டத்தின் வேகம் ஓரிரு மாதங்களை ஒரு சில கனங்கள் போல்கடத்திச் சென்றது.

மாத விடுமுறை வந்துவிட்டது. விடுமுறையின் இறுதி நாளன்று ஷாலினி 'ராமன் நீங்க வீட்ட வந்து முறைப்படி பொம்பிளை கேளுங்கோ? அவையள் ஒத்து வருவினம் நம்மட காதலுக்கு' என்று கூறிய வார்த்தைகள் தேனாய் இனித்தது.

ஒரு நல்ல நாள் பார்த்து ஷாலினியின் வீடு உள்ள மல்லாகத்திற்குச் செல்கின்றான் இராமலிங்கம்....மல்லாகத்திலிருந்து திரும்பும் இராமலிங்கத்தின் மனம் சலனமற்றதாய் அமைதியாய் இருந்தது. காதலுக்காக வெந்து அழுவதா?... இல்லை இந்த மனிதர்களின் கண்முடித்தனமான கட்டமைப்புக்குள் மூழ்கி உறவைக் கூட இழக்கத் துணிவதைக் கண்டு வெறுப்பதா?...

இவன் வரும் பாதைகளெல்லாம் தமிழ் மொழிக்காய் ஓய்ந்த உயிர்களின் வடுக்களான கல்லறைகள் தலைகாட்டி நிற்கின்றன.

எத்தனை முறை இராமலிங்கம் தனது உடைமைகளைப் பறிகொடுத்திருப்பான். எத்தனை உறவுகளைப் பலி கொடுத்திருப்பான்.

இன்று அவன் உள்ளம் நினைத்தவளை காணச் சென்றதும் வாயிற்படிகூட அவனுக்கு மிதிக்கக் கிடைக்கவில்லை.

இராமலிங்கத்தின் உடல் கொதித்து உள்ளம் விம்மியது. அன்பெனும் வித்துக்குள் முளைக்கின்ற உறவு ஒவ்வொரு மனிதனையும் ஆட்டிப்படைக்கின்றது.

இது உண்மையில் தெய்வீகமானதா?...

அல்லது மனிதனுக்கு இறைவன் கொடுக்கும் தண்டனையின் வேதனையா?

இராமலிங்கம் அறையுள் வெறுமையாக உணர்வற்றுக் கிடந்தான். 'இதயங்கள் ஊனமான போதும் உண்மைக் காதல் ஊமையானாலும் மரணிக்காது'

இவன் மனதுக்குள் மௌனம் பேசியது . உண்மையாக.... இவனுக்கு.... நல்லதோர் செய்தி நாளை கிழக்கிலிருந்து வரும் என்ற நம்பிக்கையுடன்.....

---

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காத்திருப்பேன்...

பூ உதிர்ந்து
வாடுகின்ற காம்பு
போல
நீ இன்றி
வாழுகிறேன் நானு
மிங்கே
நீ கொண்ட காத
லென்ன
நீர் மேல் கோலம்
தானோ?
நான் கொண்ட காத
லென்ன
இலைகள் மூடும் கனி
கள் தானோ?
நீ போட்ட வேஷம்
அதை அறிந்தபின்பும்
நான் இங்கு
காத்திருப்பேன்
நீ போடும்
மணமாலைக்காக
இந்நினைவே
இனிமைதான்
நடந்தால் அருமைதான்
நீ தரும் சுமையும்-
எனக்கு
சுகங்கள் தான்
என் உயிரே தினம்
தினம்
என் விழியில் நீரடா...
என் மனமோ நீ வரு
வாய் என
காத்திருக்கும்.

**ர.கீதா, சுன்னாகம்.**

# விடியல்...

யுத்தத்தின் ரணங்கள்
நம்ம மனதில் ஆறிடவில்லை
வேடிக்கைகளும்
விசேஷங்களும்
நம் மண்ணில் வேரூன்றி
விட்டன
நம் மூலவேர்களும்
சலனத்துடன் சஞ்சரிக்கின்றன
இனி இங்கு விடியுமா?
எம் இரவுகள்
ஒளி கொடுக்கும் சூரியனை
விழுங்கியதால் இருண்டிடும்
சமுதாயம்
பண வலிமையால்
மனவலிமை இழந்து நிற்கும்
தமிழனின் நிலை கண்டு
என் பேனாவும் கண்ணீர்
சிந்துகின்றன

**தர்சிகா குணரத்தினம்,**
**கொற்றாவத்தை.**

# நீராடி வர

திருநாளாம் திருநாளாம்
தமிழ் குமரனுக்கு பெருநாளாம்
திரளாக நல்லடியார்
திடமாக நம்புமிடம்
தொல்லையினியில்லை
தொந்தரவு எமக்கில்லை
தங்கத் திருக்குமரன்
தயவு நிறையவே எமக்குண்டு!
அலங்காரக் கந்தனவன்
அகங்காரம் களைந்திடுவான்
அரோகராச் சத்தங்கள்
அலைமோதும் நல்லூரில்
காவடி ஆட்டங்கள்
கண்கொள்ளாக் காட்சியங்கே
ஆவல் அவன் புனித
கங்கை நீரில் நீராடி வர...!!!

**கயல் வண்ணன்,**
**வவுனியா.**



# நல்லைக்குமரனை வணங்குவோம் வாரீர்!

நல்லைக் குமரனை வணங்குவோம் வாரீர்! அவன்
நாமம் சொல்லிச் சொல்லிப் பாடுவோம் வாரீர்!
தொல்லை வினை போக்கும் வள்ளல் - அவன் தாள்
தொழுது பணிந்து வணங்கி வாரீர்!

தேரேறி வருகின்றான் திருமுருகன் - அவன்
திருமுக தரிசனம் கண்டிட வாரீர்!
அலை அலையாகவே வந்துமே சேரீர்! - அவன்
அழகினைப் பாடிப் பரவுவோம் வாரீர்!

கலியுக வரதனாம் கந்தன்- நமைக்
காத்திடுவான் என்றும் பயமேதும் இல்லை
திடமுடன் வடம் தொட்டிழுப் போம் - நம்
தீவினை யாவும் பறந்திடும் உண்மை.

ஆறுமுக வள்ளலை காண்போம் - அவன் அரு
ளினில் உள்ளம் மகிழ்ந்திடும் பாரீர்!
தேர்வடம் கரந்தொட்டு இழுத்திட வாரீர்! - நம்
தீமைகள் யாவும் மறைந்திடும் பாரீர்!

**கவிஞர் த.துரைசிங்கம்**

# காலம்

சூரியோதயம்
எதிலுமே
காலமது
போதையுடன்
நாளேட்டில்
பக்கம் புரட்டிச்
சிரிக்கிறது!

சூரியக் கதிரதனில்
எனை மறந்து
ரசித்தலுறும்
தருணங்கள்
தொடர்கிறது!

நேற்று
இன்றுநாளையென
நியாயங்களும்
அநியாயங்களும்
உலக மேடையதில்
அரங்கேறியபடியாய்!

கனவுகள் தேங்கி
மனக் கதவு
கனதியாய்க் கனப்பதனால்
உண்மை
பொய்மை
உய்த்தறிய இயலாத்
தருணமது தொடர்கிறது!

நிஜங்களும்
நிழல்களும்
பிடித்திழுக்க
ஆர்ப்பரிக்கையில்
மனசின் பிடியதை
விட்டகலாமல்
நான்!

**தீட்சண்யா**

# காதல்...

பூக்களை காதலிக்கலாம் - தேனீக்கள்
ஒளியை காதலிக்கலாம் - விட்டில்கள்
தண்ணீரை காதலிக்கலாம் - மீன்கள்
சூரியனை காதலிக்கலாம் - கோள்கள்
உண்மையாகலாம் இவையெல்லாம்
உலகில் ஆனால், உன்னை நான் காதலிக்கவேயில்லை
ஏன் தெரியுமா?
என் உணர்வுகளும் உயிரும் உடலும் உலகும்
நீ ஒருத்தியே!

**தே.ஜெறன்ஸ்மன், சித்தங்கேணி.**

# ஊமைக்காதல்

பக்கத்தில் இருந்தும் தோணவில்லை
அடிக்கடி கதைத்தும் சொல்லவில்லை
உனக்குள் நான் இருப்பதை நான் ஏன் உணரவில்லை
நீ பிரியும் வரை ஏன் என் மனம் ஊமையாய் கிடக்கு

**எஸ்.மனோஜ், கொழும்பு-15.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
இல. 68, எவி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் இன்னொரு பக்கம்

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டைச் சேர்ந்த நான், இரண்டாவது பெரிய ஜனநாயக நாடான அமெரிக்காவுக்கு வந்திருப்பது இதுதான் முதல் முறை. தாராள அகலத்தில் சாலைகள், குப்பைகள் இல்லாத மிகச் சுத்தமான தெருக்கள், ஜொலிக்கும் தெரு விளக்குகள், பறந்து செல்லும் கார்கள் எல்லாமே என்னை வாயடைக்கச் செய்தன. சிக்காகோவின் ஓ ஹாரே விமான நிலையத்திலிருந்து நான் தங்கியிருக்கும் இடம் வரையிலான 10 மைல் சாலைப் பயணத்தில் ஏதாவது ஓர் அப்பாவியாவது சாலையில் நடந்து செல்வார் என்று தேடித் தேடி தோற்றுத் தான் போக வேண்டியிருந்தது. எல்லாம் ஒரு கனவு மாதிரித் தோன்றியது.

இங்குள்ள சாலைகளைப் பார்த்து அரசையோ ஒப்பந்தக்காரரையோ சபிக்க வேண்டியதில்லை. எல்லாம் முகம் பார்க்கும் அளவுக்குப் பளிச்சென்று இருக்கின்றன. ஒரு குடிசையோ ஒண்டுக் குடித்தனமோ என் கண்களுக்குத் தென்படவில்லை.

கிராமப்புறங்களுக்குக்கூட மிகத் தரமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. நகரத்தில் கிடைக்கும் அனைத்து வசதிகளும் கிராமங்களிலும் உண்டு. இது கிராமம் இது நகரம் என்று பிரித்தறிவது கூடச் சிரமம் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

இங்கு எல்லோரிடமும் கார் இருக்கிறது. கார் வைத்துக்கொள்ளும் அளவுக்கு அனைவரும் பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்களே என்று நான் நினைத்துக்கொண்டேன். நடந்து போவோரைக் காண்பதே அரிது. உண்மையில் இங்குள்ள சாலைகளில் நடந்து போவதற்கெனத் தனிப் பாதையே கிடையாது.

கொஞ்சம் விசாரித்துப் பார்த்தபோது, 2007 ஆம் ஆண்டுக் கணக்குப்படி அமெரிக்காவில் 25.44 கோடி பயணிகளுக்கு வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. அப்படியென்றால் அமெரிக்காவில் 15 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் கார் வைத்திருக்க வேண்டும். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட கார்கள் கூட வைத்திருக்கலாம்.

இதை என்னால் நம்பவே முடியவில்லை. நாம் பார்த்த நகரம் தவிர மற்ற பகுதிகள் வேறு மாதிரி இருக்கலாமோ என்கிற சிந்தனைகூட என்மனதில் ஓடியது. ஆனால், அது தவறு என்று பின்னர் தெரிந்தது. வாஷிங்டன் டி.சி.நியூயோர்க் போன்ற பெரிய நகரங்களுக்கும் போஸ்டன், மெக்ஸிகன் சிட்டி, நியூ ஜெர்சி, பால்திமோர் போன்ற சிறிய நகரங்களுக்கும் சென்றபோது முன்பு கண்ட காட்சிகளையே கண்டேன். எல்லாம் வழமையான ஜொலிக்கும் நகரங்கள்தான்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளாக இங்கு வசிப்பவர்களிடம் கேட்டால் வேறு ஏதேனும் விபரங்கள் தெரியவரும் என்கிற எண்ணத்தில் பலரிடம் விசாரித்தேன். அவர்களும் இதையேதான் சொன்னார்கள். எல்லா நகரங்களும் இப்படித்தான் இருக்குமென்றார்கள். ஏழை நாடுகளில் உள்ள எந்தவொரு மூன்றாந்தரமான நிலைமையும் அமெரிக்காவில் எங்கு தேடினாலும் கிடைக்காது என்று எனக்குத் தோன்றியது.

நாட்டின் வளத்துக்கு ஏற்றபடி மக்களும் நவநாகரிகப் பழக்கவழக்கங்களுடன் வசதியான வாழ்க்கை முறையையும் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனது முதல் பார்வையிலேயே மற்ற நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான வித்தியாசத்தைக் கண்டுகொள்ள முடிந்தது. இந்தியாவைக் காட்டிலும் மூன்று மடங்கு நிலப்பரப்பைக் கொண்டிருக்கும் அமெரிக்காவில் இந்தியாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்களே வாழ்கிறார்கள் என்பதும் ஆச்சரியமளித்தது.

அண்மையில் வெளியான பத்திரிகைச் செய்தியின்படி, அமெரிக்காவில் உள்ள 39 சதவீத வீடுகளில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. தேசிய செல்லப் பிராணிகள் வளர்ப்போர் அமைப்பினர் நடத்திய கணக்கெடுப்பில் 4.56 கோடி அமெரிக்க வீடுகளில் சுமார் 7.75 கோடி நாய்கள் வளர்க்கப்படுவதாகத் தெரியவந்திருக்கிறது. அதாவது, சில வீடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட நாய்கள்கூட வளர்க்கப்படுகின்றன.

நாய்களைத் தவிர வேறு சில செல்லப் பிராணிகளையும் அமெரிக்கர்கள் வளர்க்கின்றனர். பறவைகள் [1.5 கோடி], பூனைகள் [9.36], குதிரைகள் [1.33 கோடி] போன்றவையும் அமெரிக்கர்களின் செல்லப் பிராணிகள் பட்டியலில் இடம்பிடித்திருக்கின்றன.

பொருளாதார மந்தநிலையாலோ, கதவடைப்புகளாலோ, வேலை இழப்புகளாலோ இந்தச் செல்லப் பிராணிகள் வளர்ப்பு மட்டும் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. சொல்லப் போனால் கடந்த சில ஆண்டுகளில் செல்லப் பிராணி வளர்ப்பு 5 % அதிகரித்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டுக் கணக்குப்படி செல்லப் பிராணிகளுக்காக அமெரிக்கர்கள் செலவு செய்த தொகை மட்டுமே கிட்டத்தட்ட 2 இலட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. உலக வங்கியின் ஆவணங்களின்படி அந்த ஆண்டில் உலகில் 114 நாடுகளின் மொத்த வருவாயே இதைவிடக் குறைவுதான்.

அமெரிக்கர்கள் வளர்க்கும் நாய்களுக்குக் கிடைக்கும் சொகுசையும் அன்பையும் ஏழை நாடுகளில் உள்ள மனிதர்கள் கனவில் கூட அனுபவிக்க முடியாது. இதெல்லாம் என்ன பிரமாதம்.

நாய்களுக்கென்று பிரத்தியேகமாக ஹோட்டல்களே இயங்குகின்றன என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அங்குள்ள அறைகளில் ஒரு நாள் தங்குவதற்கு 4,500 க்கு மேல் செலவாகும். இதுதவிர, நாய்களுக்கென தனி காப்பகங்களும் மசாஜ் கிளப்புகளும் கூட இருக்கின்றன. இதிலிருந்து அமெரிக்காவில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களுக்குக் கிடைக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டியதுதான்.

இந்த நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு சுமார் 640 இலட்சம் கோடியாகும். நடப்பு ஆண்டில் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மட்டும் சுமார் 31 இலட்சம் கோடிகள். உலகின் ஒட்டுமொத்த இராணுவச் செலவு 44 சதவீதமாகும். உலகின் 189 நாடுகளின் ஒட்டுமொத்த பட்ஜெட்டே இராணுவத்திற்காக அமெரிக்கா செய்யும் செலவை விடக் குறைவானது எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா ஒரு பணக்கார நாடு என்று நாம் முடிவுக்கு வருவதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டியிருக்கிறது?



ஆனால், இத்தனை பணக்கார நாடு பொறுப்பான நாடாக இருக்கிறதா என்கிற கேள்வி நம் மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. உலகில் நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் ஏழைகளாகப் பசியால் வாடிக்கொண்டிருக்கும் போது இராணுவத்துக்கும் நாய்களுக்கும் பல ஆயிரம் கோடிகளைச் செலவு செய்யும் ஒரு நாட்டை பொறுப்பான நாடு என்று எப்படி ஏற்றுக் கொள்வது?

மக்கள் எப்படிப்பட்ட சொகுசான வாழ்க்கையைத் தேடுகிறார்கள் என்பதற்குத்தான் இங்கு நாய்களை உதாரணமாகக் காட்ட வேண்டியதாயிற்று. மற்றபடி நாய்களை நாம் வெறுக்க வேண்டும் என்று தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது.

உலகின் மற்ற நாடுகளை விடுங்கள். மிக உன்னிப்பாகப் பார்த்தால் ஜொலிக்கும் அமெரிக்காவுக்குள்ளேயே ஏழ்மை இருக்கத்தான் செய்கிறது. முதலில் நாம் பார்த்த கணக்குக்கு நேரெதிரான ஆச்சரியப்படத்தக்க வகையிலான இன்னொரு புள்ளிவிபரம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

செல்வத்தில் கொழிக்கும் அமெரிக்காவிலேயே 5 கோடிப் பேர் ஏழைகளாம். 1.67 கோடி குழந்தைகளுக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதிலும் ஆபிரிக்க-அமெரிக்க இனத்தைச் சேர்ந்தவர்களில் 25 சதவீதம் பேர் ஏழைகளாக இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. ஏழ்மையிலும் இனப்பாகுபாடு உள்ளது என்பது தனிக்கதை.

இதேபோல் துல்லியமான புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை என்றாலும் அமெரிக்காவில் ஆயிரக்கணக்கானோருக்கு வீடில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். அந்நாட்டு வீட்டு வசதிவாரியம் கடந்த 2008 ஆம் ஆண்டு நடத்திய கணக்கெடுப்பில் சுமார் ஆறரை இலட்சத்துக்கும் அதிகமானோர் வீடில்லாதவர்கள் எனத் தெரியவந்தது.

இவற்றிற்கெல்லாம் மேலாக வேலையில்லாத் திண்டாட்டம் அமெரிக்காவை ஆட்டிப்படைக்கிறது. கிட்டத்தட்ட 9.5 % அமெரிக்கர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இப்போதைக்கு இந்த நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகளும் தெரியவில்லை. நிறையப்பேருக்கு வேலையில்லையென்றால் வருமானம் இல்லாத ஏழைகளின் எண்ணிக்கையும் அதிகம் என்பதுதானே பொருள்.

எனது முதல் பார்வையில் நான் கவனிக்காமல் விட்ட இன்னொரு விடயம் அமெரிக்காவின் சுற்றுச்சூழல் சீர்கேடு சுமார் 60 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் 'உயிரை அச்சுறுத்தும்' அளவுக்கு காற்று மாசுபாடு நிறைந்த பகுதிகளில் வாழ்வதாக அமெரிக்க நுரையீரல் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதல் பத்தியில் நாம் பார்த்த கார்களின் அணிவகுப்பு காற்றை விஷமாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சமதர்ம சமூகம் பற்றி நாளுக்கு நாள் பேசிக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் பளிச்சென்ற சாலைகளுக்கும் பகட்டான வாழ்வுக்கும் சுத்தமான சூழலுக்கும் ஜொலிக்கும் நகரங்களுக்கும் பின்னணியில் இருப்பது வறுமையும் சுற்றுச்சூழல் சீர்கேடும் இயற்கை வளங்களின் விரயமும்தான். வறுமையை விரட்டுவதற்கு அமெரிக்கா யாரிடமும் கையேந்த வேண்டியதில்லை. இராணுவச் செலவைக் குறைத்துக் கொள்வதுடன் வீணாகப் போகும் வளத்தை முறைப்படுத்துவதுமே போதுமானது.

**பி.எஸ்.எம்.ராவ்.**
**(தினமணி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டப் புகார் திட்டமிட்ட சதியா?

கிரிக்கெட் வீரர்கள் மீதான சூதாட்டப் புகார் நிரூபிக்கப்பட்டால் வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென வும் ஆனால் இந்தப் புகார்கள் அணியின் பெயரைக் கெடுக்கத்திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட சதியாக இருக்கலா மென்ற கோணத்திலும் பாகிஸ்தான் அரசு விசாரணை நடத்துமெனவும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கூறியுள்ளார்.

சூதாட்டப் புகார்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவா திக்க உயர்நிலைக் கூட்டம் ஒன்று சில தினங்களுக்கு முன் நடைபெற்றது. கூட் டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரஹ்மான் மாலிக் கூறியதாவது;

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மீது சூதாட்டப்புகார்கள் எழுந்துள்ளன. இது விரும்பத்தகாத நிகழ்வு. சம்பந்தப்பட்ட வீரர்கள் மீது கூறப்படும் புகார்கள் நிரூ பிக்கப்பட்டால் நிச்சயம் கடும் நடவ டிக்கை எடுக்கப்படும்.

எனினும் இது பாகிஸ்தான் அணிக்கு கெட்டபெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் திட்டமிட்டு இந்தப்பு கார்கள் பரப்பப்பட்டிருக்கலாமென்ற கோணத்திலும் நாங்கள் விசாரணை நடத்தவுள்ளோம். ஏற்கனவே எங்களது அணியின் பெயரைக் கெடுக்கவேண் டுமென்ற நோக்கில் பலர் செயல்பட் டனர். அதையும் நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.


இது குறித்து பிரதமர் யூசுப் ரஸா கிலானி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் இஜாஸ் ஹுசைன் ஜக்ரானி ஆகியோரிடம் பேசியுள்ளேன். இந்தப் புகார்கள் குறித்து பிரதமர் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார். வீரர்கள் உண்மையிலேயே தவறு செய் திருந்தால் அவர்கள் மீது கடும் நடவ டிக்கை எடுக்கப்படுமென்று பிரதமர் கூறியுள்ளார்.

இங்கிலாந்து பொலிஸாரின் விசா ரணை அறிக்கை கிடைத்த பின் பாகிஸ்தா னின் எப்.ஐ.ஏ.அமைப்பின் விசாரணைக் குழு இங்கிலாந்து செல்லும். வீரர்களிடம் நடத்தப்பட்ட சோதனை தொடர் பான விபரங்களை நாங்கள் ஸ்கொட் லாண்ட் யார்ட் பொலிஸாரிடம் கேட் டுள்ளோம்.

பாகிஸ்தான் விசாரணை அதிகா ரிகள் இன்ரபோல் மூலமாக இங் கிலாந்து அதிகாரிகளை தொடர்பு கொண்டுள்ளனர். இது தொடர்பான விபரங்கள் கிடைத்த பின்னர் எங் களது எப்.ஐ.ஏ.குழு இங்கிலாந்து செல்லும்.

வீடியோ ஆதாரங்கள் திட்டமிட்ட ச தியாகக்கூட இருக்கலாம். அதை நம்பி வீரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது. இப்போது எதை யும் உறுதியாகக் கூறமுடியாது. இது குறித்து விசாரித்து வரும் இங்கிலாந்து பொலிஸார் விளையாட்டு அமைச்ச கத்திடம் அறிக்கை கையளிப்பர். அ துவரை அனைவரும் பொறுமையாக இருக்கவேண்டுமென்றார்.









## வேதனை தரும் சூதாட்டம்

கிரிக்கெட் சூதாட்ட விவகாரம் வேதனையை தருவதாகவும் கிரிக்கெட் எப்போதுமே சரியான பாதையிலேயே செல்லவேண்டுமென்றும் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட் டியில் சச்சின் சூதாட்ட விவகாரம் தொடர் பாக கருத்து தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் மீது சூதாட்ட விவகாரம் தவறான அபிப்பி ராயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த விவ காரத்திலிருந்து விடுபட்டு கிரிக்கெட் சரியான பாதையில் முன்னேறிச் செல்லவேண்டும். கிரிக்கெட்டுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகை யில் சிலர் நடந்து கொள்வது வேதனையை தரு வதாகவும் கூறினார்.

## 'ஐ.சி.சி.பார்த்துக் கொண்டிருக்கிறது'

சர்வதேச கிரிக்கெட் 'ஸ் பொட் பிக்சிங்' காரணமாக தடுமாறிக் கொண்டிருக்கி றது. ஆனால், ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்புக் கண்காணிப் புக்குழு செயல்படுவதாகத் தெரியவில்லையென அவுஸ் திரேலிய வீரர் ஷேன் வற்சன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

2009 இல் இங்கிலாந்தில் நடந்த ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தின் போது அவுஸ்தி ரேலிய வீரர் பிராட் ஹாடினை யும் அடுத்து நடந்த ஆஷஸ் தொடரின் போது ஷேன் வற் சனையும் மும்பை சூதாட்ட கும்பல் ஆட்ட நிர்ணய சதியில் (மேட்ச்பிக்சிங்) ஈடுபட அணு கியுள்ளனர். இதை இருவரும் உறுதிசெய்தனர். இது குறித்து வற்சன் கூறியதாவது;


இங்கிலாந்து பத்திரிகையின் ரகசிய விசாரணையில் பாகிஸ் தான் வீரர்கள் ஸ்பொட் பிக்சிங் கில் ஈடுபட்டது ஆதாரத்துடன் அம்பலமானது. தவிர என்னை யும் மும்பை தரகர்கள் அணுகி னர் என ஏற்கனவே தெரிவித்தி ருந்தேன். ஆனால், இத்தனை ஆதாரங்கள் கிடைத்த பின்பும் ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு கண்காணிப்புக்குழு என்ன செய்து கொண்டிருந்தது என தெரியவில்லை. உண்மையில் அவர்கள் செயல்படுகிறார்கள் என்றே சந்தேகமாக உள்ளது.

ஐ.சி.சி. இதில் முழுமை யாக இறங்கி உண்மையான காரணத்தை கண்டறிய வேண் டும். ஒருவேளை விசாரணை மிக ஆழமாக செல்லும் என்ப தால் இவர்கள அப்படி செய்யா மலிருக்கலாம். அப்படி அவர் கள் செய்யாமலிருந்தால் மக்க ளிடம் கிரிக்கெட்டுக்கு இருக் கும் மதிப்பு குறைந்து விடும். தவிர தாங்கள் பார்ப்பதில் எது உண்மை எனத் தெரியாததால் வேறு விளையாட்டுக்கு மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபியாக்களின் பிடியில் பாகிஸ்தான் கிரிக்கெட்



கிரிக்கெட் சூதாட்டம் பற்றிய புதிய தகவல்கள் அம்பலமாகி வரும் நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சூதாட்ட மாபியாக்களின் பிடியில் சிக்கியிருப்பது தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட வீரரை நீக்கினால் மகள் அல்லது உறவினர்களைக் கடத்தி விடுவோம் எனக்கப்டன் மற்றும் தேர்வுக் குழுத் தலைவரை மிரட்டுவது பாகிஸ்தான் கிரிக்கெட் உலகில் வாடிக்கையாக இருப்பதும் அம்பலமாகியுள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்னர் கிரிக்கெட் சூதாட்டம் அம்பலமான பிறகு பாகிஸ்தான் வீரர்களில் பலர் சூதாட்டத்தில் தொடர்பு கொண்டிருப்பது அவ்வப்போது தெரியவந்துள்ளது. தற்போது பாகிஸ்தான் வீரர்கள் ஸ்பொட் பிக்சிங் மோசடியில் கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கின்றனர்.




இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சூதாட்ட மாபியாவால் கட்டுப்படுத்தப்படுவது பற்றித் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சூதாட்டப் புகார்களில் வீரர்கள் சிக்கியது தெரிந்தால் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சுலபமில்லை. காரணம் வீரர்களை நீக்கினால் சூதாட்ட மாபியாவிடமிருந்து மிரட்டல் வரும்.

சம்பந்தப்பட்டவர்களின் மகள் அல்லது குடும்பத்தினரைக் கடத்தி விடுவோம் என்று மாபியா மிரட்டல் விடுக்கும். பலமுறை இப்படிக் கடத்தப்பட்டதும் நடந்திருக்கிறது.

2000 ஆம் ஆண்டில் வசிம் அக்ரமின் தந்தைக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் அவர் சூதாட்டத் தரகர்களால் ஒருநாள் கடத்தி வைக்கப்பட்ட சம்பவமேயாகும்.

அப்போது நடைபெற்ற டெஸ்டில் அக்ரம் கப்டனாக இல்லை என்ற போதிலும் ஏதோ ஒரு பிரச்சினை காரணமாக அவரது தந்தை கடத்தப்பட்டிருக்கிறார். இதே போல் ஒரு முறை பாகிஸ்தான் வீரர் ஒருவரை நீக்கத் தீர்மானித்த போது அணியின் பயிற்சியாளராக இருந்த லோசன் கப்டன் மற்றும் பயிற்சியாளரால் அழைக்கப்பட்டார்.

அந்த வீரரை நீக்கினால் எனது மகளைக் கடத்தி விடுவார்கள் என்று தேர்வுக்குழு உறுப்பினர் அப்போது அழுதிருக்கிறார். இப்படிக் கடத்தல்களும் மிரட்டல்களும் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் சகஜமென்று கூறப்படுகிறது.

பாகிஸ்தான் வீரர்களோடு எப்போதுமே நிழல் மனிதர்கள் சுற்றிக் கொண்டிருப்பார்கள். கிரிக்கெட் தரகர்களுக்கும் பாகிஸ்தான் வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

தாவுத் இப்ராஹிம் மும்பை நிழல் உலக தாதாவாக ஆதிக்கம் செலுத்திய காலம் முதல் இந்தத் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது. ஷார்ஜாவில் நடைபெற்ற பல போட்டிகளில் தாவுத் இப்ராஹிம் ஆட்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அது மட்டுமல்ல பாகிஸ்தான் கிரிக்கெட் சூதாட்ட மாபியாக்களின் ஆதிக்கத்திலிருப்பதால் சூதாட்டத்தில் விரும்பினாலும் கடும் நடவடிக்கை எடுக்க முடியாதென்று கூறப்படுகிறது.

# இங்கிலாந்து வீரர்கள் களம் இறங்குவார்களா?

பாகிஸ்தானுடனான ருவென்ரி - 20 மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டி அணியில் சூதாட்ட குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட வீரர்கள் இடம்பெற்றால் இங்கிலாந்து வீரர்கள் களமிறங்குவார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அந்த 3 வீரர்களையும் ருவென்ரி -20 மற்றும் ஒருநாள் போட்டியிலிருந்து நீக்குமாறு இங்கிலாந்து வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து இங்கிலாந்து தொழில் முறை கிரிக்கெட் வீரர்கள் சங்கத் தலைவர் ஆங்கஸ் போர்டர் கூறியதாவது;

கார்டிப்பில் ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருக்கும் சர்வதேச 'ருவென்ரி - 20' போட்டிக்கு முன் சர்வதேச கிரிக்கெட் சபை தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று இங்கிலாந்து வீரர்கள் விரும்புகின்றனர். ஆட்டத்தைத் தொடர்வது எவ்வளவு முக்கியமானதென்று இங்கிலாந்து வீரர்கள் அறிவார்கள். அதேசமயம் குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்களுடன் விளையாடுவதை சிரமமாகக் கருதுகின்றனர்.

குற்றம் செய்தவர்களை அணியிலிருந்து நீக்கவேண்டும். அல்லது அவர்கள் விளையாட முடியாதவாறு ஏதாவது தீர்வு காண வேண்டுமென்பதே எங்களின் விருப்பம்.

இங்கிலாந்து வீரர்கள் என்னிடம் சொல்லவில்லை என்றாலும் அவர்கள் அனைவரும் இந்த விடயத்தில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் வெறுப்படைந்துள்ளனர் என்று நினைக்கிறேன். இந்தச் சிக்கலான விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதைப் பார்க்கவே விரும்புகிறோம். இதை சாதாரணமாக விட்டுவிடக்கூடாதென்றும் கூறினார்.



ஞாயிற்றுக்கிழமை ஸ்வாலெக் அரங்கில் நடக்கவுள்ள போட்டியில் இங்கிலாந்து வீரர்கள் மைதானத்திற்குள் வர மாட்டார்கள் என்று போர்டர் கூறவில்லை. ஆனால் அந்தப் போட்டியின் தன்மை சந்தேகத்திலிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

டௌன்டனில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் ஆசிப், ஆமிர், பட் ஆகிய 3 பேரும் விளையாடவில்லை. அவர்களிடம் ஸ்கொட்லாண்ட் யார்ட் துப்பறிவாளர்களும் பின்னர் ஐ.சி.சி.யும் விசாரணை நடத்தியுள்ளதாலேயே அவர்கள் விளையாடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் போட்டிக்கு பாரிய அச்சுறுத்தல்

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் டெல்லியில் அக்டோபர் மாதம் 3 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. 71 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

டெல்லியில் 13 இடங்களில் கொமன்வெல்த் போட்டிகளை நடத்த ஸ்ரேடியங்கள் கட்டப்பட்டுள்ளன. ஸ்ரேடிய கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. எனவே போட்டி திட்டமிட்டபடி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மினி ஒலிம்பிக் போட்டி என்றழைக்கப்படும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகளில் ஊழல் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தாலும் ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. போட்டிகளைக் கண்டுகளிக்க சுமார் 5 இலட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் வருவார்கள் என்று தெரிகிறது.



கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இந்தியா வெற்றிகரமாக நடத்துவது பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளுக்குக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டியை சீர் குலைக்க பாகிஸ்தான் தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர். போட்டி தொடங்கும் முன்பும் போட்டி நடைபெறும் நாட்களிலும் தீவிரவாதிகள் நாசவேலையில் ஈடுபடலாமென்று கூறப்படுகிறது.

தீவிரவாதிகளின் இந்தச் சதித்திட்டம் குறித்து உலகின் பல்வேறு நாடுகள், தங்கள் உளவுத்துறை மூலம் தகவல்களைச் சேகரித்து தங்கள் நாட்டு ரசிகர்களை உஷார்படுத்தியபடியுள்ளன. சில தினங்களுக்கு முன்பு அமெரிக்கா ஒரு எச்சரிக்கை வெளியிட்டது.

அவுஸ்திரேலியா வெளியிட்ட எச்சரிக்கையில் டில்லியிலிருக்கும் போது உஷாராக இருக்கும்படி கேட்டுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா மீண்டும் ஒரு எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதில் டில்லியில் அக்டோபர் மாதம் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும். எனவே உஷாராக இருக்கவும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் கொமன்வெல்த் போட்டிகள் நடக்கும் போது தீவிரவாதிகள் தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். அதற்கு ஏற்ப டில்லியில் உள்ள அமெரிக்கர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று அமெரிக்கா தனது நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்கா வெளியிட்டுள்ள எச்சரிக்கைத் தகவலில், கொமன்வெல்த் போட்டி நடக்கும் நாட்களில் தாக்குதல் நடத்தப்படும் என்று உறுதியான குறிப்பிட்ட அச்சுறுத்தல் எதுவும் இல்லை. உலகம் முழுக்க அமெரிக்கர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்படுவதால் இந்த முன் எச்சரிக்கை வெளியிடப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய எச்சரிக்கையைத் தொடர்ந்து டில்லி நகர பாதுகாப்பு ஏற்பாடுகளில் மத்திய அரசு தனிக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. டில்லியில் 4 அடுக்கு பாதுகாப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பணிகளில் இராணுவ வீரர்களை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் 13 இடங்களும் வரும் 7 ஆம் திகதிக்குள் பொலிஸ் வசம் ஒப்படைக்கப்படும். அதன் பிறகு பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒருங்கிணைந்து செய்து முடிக்க திட்டமிட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் அணு ஆயுதம், இரசாயனத் தாக்குதல், கதிர் வீச்சுத் தாக்குதல் உட்பட எத்தகைய தாக்குதலில் ஈடுபட்டாலும் முறியடிக்க இராணுவத்தினர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஸ்ரேடியம் முழுவதும் கண்காணிப்பு கமெராக்கள், மெட்டல் டிடெக்டர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்காக 45 நாட்கள் கால அவகாசம் எடுத்துக் கொள்ள முன்பு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ஸ்ரேடியம் கட்டுமானப் பணிகள் முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டதால் தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய ஒரு வார கால அவகாசமே கிடைத்துள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் டெல்லியில் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில்;

15 ஆம் திகதிக்குள் பாதுகாப்பு ஏற்பாட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டு விடும் என்றார்.

போட்டிகளில் பங்கேற்கவுள்ள வெளிநாட்டு வீர, வீராங்கனைகள் 14 ஆம் திகதி முதல் டெல்லி வரத்தொடங்கி விடுவார்கள். அதற்கு முன்னதாக விடுதிகளையும் ஸ்ரேடியங்களையும் தயார்படுத்தப் பணிகள் நடந்துவருகின்றன.

வீரர்கள் தங்கும் விளையாட்டுக் கிராமத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதிகள் தாக்கும் பட்சத்தில் எப்படி விரைந்து செயற்பட வேண்டுமென்றும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அவசரகால நடவடிக்கைகளின் போது போக்குவரத்தை ஒழுங்குப்படுத்துவது பற்றியும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முக்கிய பிரமுகர்கள், வெளிநாட்டு விருந்தினர்கள் மற்றும் வீரர்களை ஸ்ரேடியத்துக்கு அழைத்து வர அனுப்பி வைக்கவென்று தனித் தனியே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காகவே 574 புத்தம் புதிய பஸ்கள் வாங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பஸ்ஸுக்கும் அதிரடிப்படை பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஸ்ரேடியத்திலும் சுமார் 150 பஸ்கள் நிற்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.


வெளிநாட்டு வீரர்கள் செல்லும் பகுதிகளில் அதிரடிப்படை வீரர்கள் நிறுத்தப்படுவார்கள். இது தவிர வெளிநாட்டு வீரர்களின் வாகனப் பயணத்தை ஹெலிகொப்டர்களில் பறந்தபடி கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வாரத் தொடக்கத்தில் டெல்லி நகரம் முழுவதும் பாதுகாப்பு வளையத்துக்குள் வந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
















பிரியாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.